Volume - 48
Issue - 10
JULY - 2025
விசுவாவசு - ஆடி
Rs.25/-

# ஸ்ரீதாசார்யன்




ஸ்ரீ செல்வப்பிள்ளை குதிரை வாகன சேவை
திருநாராயணபுரம் (மேல்கோட்டை)



JAYANTILAL CHALLANI
GROUP
உன்னை என்றும்
நான் மறவேன்...
அழகு ஓவியமாய் தெய்வாம்சம்
நிறைந்த டெம்பிள் நகைகள்.
CHALLANI
JEWELLERY MART
CHALLANI
HOUSE OF SILVER
Fedha
by CHALLANI
THE COLLECTIVE SILVER JEWELLERY
Lille
By CHALLANI
(Govt. Authorised Valuer for Income Tax & Customs)
CHENNAI - 19/1, Raghaviah Road, T.Nagar | 138, North Usman Road, T.Nagar | Ph: 044 - 40060777
MADURAI - 26, New Natham Road | Ph: 0452 - 4200577 | PONDICHERRY - 58, Mission Street | M: 99442 83436

# கீதாசார்யன் 562

कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन



**ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்**

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி
தாழ்வாதுமில் குரவர் தாம் வாழி – ஏழ்பாரும்
உய்ய அவர்கள் உரைத்தவைகள்தாம் வாழி
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

| ஆண்டு **47** | நம்மாழ்வார் ஆண்டு 5126 விச்வாவஸு ஆடி (ஜுலை 2025) | இதழ் **10** |
|---|---|---|


# ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணம்

*ஸ்ரீமதுபயவேதாந்த மஹாவித்வான் காஞ்சீ பிரதிவாதி பயங்கரம்*

## அண்ணங்கராசார்ய ஸ்வாமி

ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணத்தை விளக்கவந்த சாஸ்த்ரங்கள் பலவும் பலமுகமாகப் பேசியுள்ளன. "யே கண்டலக்ந துலஸீநளிநாக்ஷமாலா: யே பாஹுமூலபரிசிஹ்நித



சங்கசக்ரா:, யே வா லலாடபலகே லஸதூர்த்வபுண்ட்ரா: தே வைஷ்ணவா: புவநம் ஆசு பவித்ரயந்தி " என்கிற சுலோகம் பெரும்பாலும் பலருமறிந்ததேயாகும். ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு இருக்கவேண்டிய வெளிவேஷங்களை மாத்திரம் இந்தச்லோகம் தெரிவிக்கின்றதேயன்றி அந்த:கரணத்தில் இருக்கவேண்டிய அம்சங்களில் ஏகதேசத்தையும் தெரிவிக்கவில்லை. அவற்றைத் தெரிவிக்கின்ற ச்லோகங்களும் இதிஹாஸ புராணங்களில் மிக மலிந்துகிடக்கின்றன.

பகவத்கீதையில் பத்தாவது அத்யாயத்தில் (ச்லோ. 5) "அஹிம்ஸா ஸமதா" என்ற விடத்தில் ஸமதா என்பதை விவரித்தருளா நின்ற நமது பாஷ்யகாரர், "ஸமதா–ஆத்மநி ஸுஹ்ருத்ஸு விபக்ஷேஷுச ஸமமதித்வம்" என்று உரைத்தருளினார். அங்கு தாத்பர்யசந்த்ரிகையில் தேசிகன் *ஸமமதிராத்ம ஸுஹ்ருத் விபக்ஷபக்ஷே – இதி பகவத்பராசரவசநமிஹ தத்தத்பதை: ஸ்மாரிதம்* என்றருளிச் செய்தார்.

ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் (3-7-20) * நசலதி நிஜவர்ணதர்மதோ ய: ஸமமதி ராத்ம ஸுஹ்ருத் விபக்ஷபக்ஷே, நஹரதி நச ஹந்தி கிஞ்சிதுச்சை: ஸிதம்நஸம் தமவேஹி விஷ்ணுபக்தம்* என்றுள்ள சுலோக ரத்நமே இங்கு எடுத்துக் காட்டப்பட்டதாயிற்று. இதில் *ஸமமதிராத்மஸுஹ்ருத் விபக்ஷ பக்ஷே* என்கிற இரண்டாவது பாதம் முக்கியமாகக் கணிசிக்கத்தக்கது. தன்னிடத்திலும் தன் நண்பர்களிடத்திலும் தன் பக்கலில் பகை பாராட்டு மவர்களிடத்திலும் ஒரு நிகரான புத்தியை யுடையவனா யிருப்பவன் எவனோ அவனே ஸ்ரீவைஷ்ணவன் என்று இதனால் தெரிவிக்கப்படுகின்றது.

இப்படிப்பட்ட ஸ்ரீ வைஷ்ணவத்வம் ப்ரஹலாதாழ்வான் போல்வாரிடத்தில் இருந்ததாகக் கதை களில் கேட்டுவருகின்றோ மத்தனையல்லது இக்காலத்தில் சில வ்யக்திகளிடத்திலாவது இதைக் காண முடியுமோ என்று பார்த்தால் முடியாதென்றே முடிவுகட்டவேண்டிய தாகும்.

முற்காலத்தில் பட்டர் நம்பிள்ளை போல்வாருடைய சில இதிஹாஸங்களை நாம் கேட்கும் போதும் புத்தகங்களில் வாசிக்கும் போதும் ''உண்மையாக இங்ஙனே நடந்திருக்குமா !'' என்று அதிசங்கிக்குமவர்களாக நாம் இருக்கின்றோமே தவிர, ''நாமும் அந்த நடையைச் சிறிதாகிலும் அநுகரிக்க முயலவேண்டும்'' என்று பாரிக்கிற அதிகாரிகள் இலரென்றே சொல்லவேண்டும்.

ஸ்ரீவசநபூஷணத்தில் ''குற்றம் செய்தவர்கள் பக்கல் பொறையும் க்ருபையும் சிரிப்பும் உகப்பும் உபகாரஸ்ம்ருதியும் நடக்கவேணும்'' என்ற விடத்து ஜநந்யாசாரியருடைய வியாக்கியானமான ஆய்ப்படியில், "பட்டர் ஒருநாள் பெருமாள் ஸந்நிதியிலே அநுஸந்தானம் பண்ணாகிற்க, சிலர் செவி பொறுக்க வொண்ணாத பருஷோக்தி பண்ணக் கேட்டு, சாத்தின திருவாழிமோதிரத்தையும் திருப்பரியட்டத்தையும் கொடுத்தருளி, முதலிகளைப்பார்த்து, இவர்கள் பருஷித்ததுக்கு நான் அஞ்சிக் கொடுத்தேனன்று; நாமறியாத தோஷங்களையும் பெருமாள் திருச்செவி சாத்தும்படி சொன்ன உபகாரத்தைப் பற்றக் கொடுத்தேனத்தனை.. என்றருளிச் செய்தார்" என்று காண்கிறது. பட்டர் தம்மை தூஷித்தவர்களுக்கு பூஷண தாநமும் பீதாம்பர தாநமும் செய்தருளியதாக இங்ஙனே இதிஹாஸம் காண்கிறோம். இதை யெல்லாம் நாம் பிறர்க்கு எடுத்துரைக்கும்போது கல்லும் கரையும்படி உரைக்கின்றோம்; கேட்பவர்களும் கண்ணுங் கண்ணீருமாயிருந்து புளகாஞ்சிதராய்க் கேட்கிருர்கள். ஆனால் அவரவர்களுடைய அனுஷ்டானம் எங்ஙனே யிராநின்றதென்று பார்த்தால் வாய்திறக்க வழியேயில்லை.

நமக்கு நைச்யாநுஸந்தாநம் ஸ்வரூபம் என்றறிந்து நாம் ''நீசனேன் நிறையொன்றுமிலேன்'' என்றும் ''சீலமில்லாச் சிறியன்'' என்றும் பலவாறு பாசுரங்களையும் ச்லோகங்களையும் முன்னிட்டுத் தாழ்வு சொல்லிக்கொள்ளுகிறோம். நம் வாயினால் வெளி வந்த அந்தத் தாழ்வுதன்னையே பிறரொருவர் நம்மை நோக்கி எடுத்துரைக்கத் தொடங்கினால் ''என்னையா நீச னென்றாய்? என்னையா நிறையொன்று மில்லாதவனென்றாய்? என்னையா சீலமில்லாச் சிறியனென்றாய்? பாவீ ! நீயன்றோ இப்படிப்பட்டவன்'' என்று உடனே அவரை ஆயிரம் வகையாக தூஷிக்கவும் தண்டிக்கவும் தண்டிப்பிக்கவும் எழுகின்றோம். ஒவ்வொருவரும் தம்தம் அனுபவத்தில் இதை நிச்சயமாகக் காணலாம்.

சில விசேஷ காலங்களில் பெரியார்களை எழுந்தருளப்பண்ணி ''ஸ்வாமிந்! ஸ்ரீபாத தீர்த்தம் ஸாதிக்கவேணும்'' என்று வேண்டுகிறோம். அதற்கு அவர்கள் ''ஐயோ! அடியேனுக்கென்ன யோக்யதை யுண்டு? ஸகல விதத்திலும் அயோக்யனன்றோ அடியேன்'' என்று பலபடியாக நிகர்ஷாநுஸந்தானம் பண்ணுகிறார்கள். இந்த அநுஸந்தானம் உள்ளவாறு செய்கிறபடியா? அல்லது இங்ஙனே சொல்லிக் கொள்ள வேண்டுவது ஒரு உபசார வழக்கு என்று கொண்டு செய்கிறபடியா? என்று நாம் யோசித்தால், அவர்களுடைய ஹ்ருதயத்தை நம்மால் தெரிந்து கொள்ளமுடியாதாயினும். அவர்கள் தாங்கள் அநுஸந்தித்த நீசத் தன்மையை நம் வாயினால் சொல்லிக்காட்டின விடத்தும், (அதாவது நீர் மிகவும் அயோக்கியர் என்று பிறர் சொன்ன விடத்திலும்) அவர்கள் உகந்தேயிருப்பார்களாயின் அப்போது தான் அவர்களுடைய நைச்யாநுஸந்தானத்தை நாம் ஸஹ்ருதயமென்று நினைக்கலாகும்.

*அஹம் அமர்யாத:, அஹம் க்ஷுத்ர:* என்று நைச்யாநுஸந்தானம் பண்ணுமவர்கள் "த்வம் அமர்யாத:, த்வம் க்ஷுத்ர:" என்கிற பரோக்திகளை உகந்திருக்கிறார்களா? என்றே நாம் பார்க்கவேண்டும். கூரத்தாழ்வான் போல்வாரான சிலரே அங்ஙனமிருந்தார்கள் என்றே சொல்லவேண்டியதாகின்றது. தம்மைப்பற்றிப் பிறர் கூறும் நிகர்ஷோக்திகளைச் சிறிதும் ஸஹியாமல் உடனே பிரபலமாக ப்ரதிஸத்காரம் செய்யப்புறப்படுமவர்கள் தாங்கள் செய்துகொள்ளும் நிகர்ஷாநுஸந்தானம் அர்த்தமற்றது என்றே சொல்லவேண்டும்.

"ஒருவன் உன்னை இடது தாடையில் அறைந்தானாகில் உடனே அவனுக்கு நீ வலது தாடையை ஆதரவோடு காட்டு" என்று பிரஸங்க மேடைகளில் பேசுவாரை மிக மிகக் காண்கிறோம். அப்படி அவர்கள் பேசி இப்பால் வந்தவுடனே அவரை ஒருவர் அடிப்பதாகக் கையோங்கும்போதே என்ன நடக் கிறதென்பதையும் காணா நின்றோம்.

ஸபைகளில் சிலர் உபந்யாஸம் பண்ணி முடிக்கும்போது ''ஒன்றுமறியாத நான் ஏதோ தப்பும் தவறுமாக உளறிவிட்டேன்; இதில் நல்லது ஒன்றுகூட இராது; சிறியேனை க்ஷமிக்கவேணும்'' என்று கால்மணி காலம் சொல்லி முடிப்பர்கள். இதே வார்த்தையை அவர் அயலார் வாயில் கேட்பாராகில் கோபாவேசங் கொண்டு கண்கள் சிவக்கப்பெற்று ''எனக்கா ஒன்றும் தெரியாது, நானா தப்பும் தவறு மாக உளறிவிட்டேன்'' என்று ஆரம்பித்து (அவரே) பிரபலமாக அட்டஹாஸங்களைச் செய்யக் காண்கின்றோம். ஆசார்ய பீடம் வஹிக்கின்ற எந்த வ்யக்தியும் தம் நிகர்ஷத்தைத் தாம் அநுஸத்திக்கிறவர்களாக இருக்கின்றார்களேயல்லது, தம்மைப்பற்றிப் பிறர் கூறும் நிகர்ஷத்தை ஆமோதிப்பவர்களாக இல்லையே? அப்படிப்பட்டவர்களன்றோ ஸ்ரீ வைஷ்ணவத்வ பூர்த்தி யுடையவராவர்.

இக்காலத்தில் இப்படிப்பட்ட வ்யக்தி தேறுவது கஷ்டமாதலால் ஒருவரும் ஸ்ரீவைஷ்ணவரல்லர் என்று நாம் சொல்லவும் நினைக்கவும் தகாது. *ப்ராஹ்மண்யாம் ப்ராஹ்மணத் ஜாதத்வம் ப்ராஹ்மண்யம்* (ப்ராஹ்மண யோநியில் பிறப்பதே ப்ராஹ்மண்யம்) என்று சொல்லுவதுபோல, *வைஷ்ணவ்யாம் வைஷ்ணவாத் ஜாதத்வம் வைஷ்ணவத்வம்* (வைஷ்ணவ யோனியில் பிறப்பதே ஸ்ரீவைஷ்ணவத்வம்) என்று சொல்ல ப்ராப்தமாகிறது.

அப்படிப்பட்ட ஸ்ரீ வைஷ்ணவர்களுடையவும் திருவுள்ளம் புண்படாதபடி வர்த்திக்க வேண்டியது நமது கடமையே யாகும். ஒரு வைஷ்ணவருடைய திருவுள்ளம் கன்றினால் அதிற்காட்டிலும் அநர்த்தபீஜம் நமக்கு வேறில்லை என்கிற துணிவு பிறக்கவேணும்.

# திருவரங்க மாநகரில் மஹாகவி கம்பன் திருமுற்றம்

மதுரை பேராசிரியர் முனைவர் இரா.அரங்கராஜன் ஸ்வாமி

காரைக்குடி கம்பன் கழகம், கோவை கம்பன் கழகம், நாமக்கல் கம்பன் கழகம், பாளையங்கோட்டை கம்பன் கழகம், சென்னை கம்பன் கழகம்., என்ற வரிசையில் அணிசெய்யப் புகும் திருவரங்கம் மஹாகவி கம்பன் திருமுற்றம் தொடக்க விழாவில் அடியேன் சிறிய ஞானத்தன் சமர்ப்பிக்கும் ஒரு அறிமுகவுரை.

தென்குருகூர்ச் சடகோபன் வேதம் தமிழ் செய்தார் ; "வேதம் தமிழ் செய்த மெய்யன்" என்று மணவாளமாமுனிகள் போற்றுகிறார்.

தேரழுந்தூர் கம்பநாடனோ வான்மீகரின் வேத உபப்பிரும்மணத்தைத் தமிழ் செய்தார்;

நாரணன் விளையாட்டெல்லாம் நாரத முனிவன் கூற
ஆரண கவிதைசெய்தான் அறிந்த வான்மீகி என்பான்
சீரணி சோழநாட்டுத் திருவழுந்தூருள் வாழ்வோன்
தாரணி கொடையான் கம்பன் தமிழினால் கவிதைசெய்தான்

என்ற பாடலை காண்மின்

சிவனாம் அயனாம் திருமாலால் அருளப்பட்டவர் சடகோபன்; குருகை நாதன் குரைகழலால் அருள் பெற்றவன் கம்பநாடன்.

"குருகைப்பிரான் குணம் கூறும் அன்பர்கள் ஈட்டம் தொறும்
இருக்கப் பெற்றேன் இருந்து இருவிழிகள் நாலப் பெற்றேன்"

என்று கம்பநாடர் சடகோபர் அந்தாதியில் குறிப்பிடுகிறார். அவர் அவ்வாறு குறிப்பிடும் அன்பர்கள் ஈட்டம் நாதமுனிகளின் கூட்டமேயாகும்.

கிபி 885இல் ஓர் பங்குனி உத்திரத் திருநாளில் நம்பெருமாளும் ஸ்ரீரங்கநாச்சியாருமான சேர்த்தியில், ஸ்ரீமன் நாதமுனிகள் முன்னிற்கக் கம்பர் பெருமான் இராம காதையைப் பலரடியார் திருமுன்பு அரங்கேற்றினான்.

எண்ணிய சகாப்தம் எண்ணூற்றேழின்மேல் சடையன்வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்பநாடன்
பண்ணிய இராம காதை பங்குனி உத்திரத்தில்
கண்ணிய அரங்கர் முன்னே கவியரங் கேற்றினானே

(சகாப்தம் 807 – கிபி 880 ஆகும்) . அஞ்ஞான்று அங்கிருந்த பேரரசன் ஆதித்த சோழன்; குலமுறை கிளத்துப் படலத்தில் மநு மன்னவனைக் குறிப்பிடும் பொது 'ஆதித்தன் குலமுதல்வன்' என்று தெளிவுறுத்துகிறார். சோழ மன்னர்கள் சூரிய வம்சத்தவர் என்பது நினைக்கதக்கது.

கம்பர் பிரானும் இராம காதையைக் தொடங்குவதற்கு முன் திருவரங்கர் ஆணையிடச் சடகோபர் மீது ஓர் அந்தாதி நூல் பாடியருளினார்.

இதனை பிள்ளைலோகம் ஜீயர் என்ற வைணவ உரையாசிரியர் உபதேசரத்தினமாலை விரிவுரையில் குறிப்பிட்டுள்ளார்.

"நம் சடகோபனைப் பாடினையோ என்று நம்பெருமாள் விஞ்சிய ஆதரத்தால் கேட்ப" என்பது அவ்வுரையாசிரியரின் மேற்கோள். இராமானுசநூற்றந்தாதி 43ஆம் பாடல் வியாக்கியானத்தில் ஸ்வாமி மணவாளமாமுனிகள் கம்பர் செய்த சடகோபரந்தாதியை மேற்கோளாக எடுத்து, அந்நூலை 'ஆழ்வார் நூற்றந்தாதி' என்று சிறப்பாகக் குறிப்பிடுகிறார். இன்றும் ஆழ்வார் திருநகரியில் நம்மாழ்வார் திருமஞ்சனம் கண்டருளும்போது அர்ச்சக ஸ்வாமிகள் சடகோபரந்தாதிப் பாடலை அநுஸந்திக்கின்றனர். அங்கு இராப்பத்து பத்தாம் திருநாள் ஆழ்வார் திருவடி தொழல் அன்று சடகோபரந்தாதி முழுவதும் ஸ்தானிகர்களால் ஓதப்பெறுகின்றது.

ஆழ்வார் அருள்பெற்று நாதமுனிகளால் அங்கீகரிக்கப்பட்டு நம்பெருமாள் திருவோலக்கத்தில் அரங்கேறியதால் திவ்யப்ரபந்த வ்யாக்யான சக்ரவர்த்திகள் இராம காதையைப் பிரமாண நூலாக மதித்து போற்றினர்.

நம்பிள்ளை தாமருளிய ஈடு உரையில் கம்ப ராமாயணத்திலிருந்து இரண்டு பாடல்களை மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

தீமுற்றத் தென்னிலங்கை ஊட்டினான் தாள் நயந்த
யாமுற்றது உற்றாயோ வாழி கனைகடலே (திருவாய்மொழி 2–1–3)

என்று தலைவி கடலை வினவுவதாய் பாசுரம் அமைகின்றது.

இப்பாசுரப் பகுதியில் தென்னிலங்கையைத் தீமுற்ற ஊட்டினான் என்று அன்வயித்து நயவுரை கூறும் நம்பிள்ளை, "ராவண பயத்தாலே முன்பு அரைவயிறாக ஜீவித்த அக்னி வயிறு நிறைய உண்டு ஜீவிக்க பெற்றது பெருமாளை அண்டை கொண்ட பலத்தாலே: என்பர். மேலும் இலங்கையை உண்ட எரி தெவிட்டியது என்பதையும் உணர்த்த விரும்பிய நம்பிள்ளை, "செந்தீயுண்டு தேக்கிட்டதே என்னக் கடவதிறே" என்று கம்பராமாயண பாடல் ஒன்றை காட்டுகிறார்.

இலங்கை எரியூட்டு படலத்தில்,

"நின்று வெந்துமா நீறெழுகின்ற செந்தீத்
திரு தேக்கிடுகின்றது தேவர்கள் சிரிப்பர் (46)

என்பது இராவணன் கூற்று. இராவணன் சினம் கொள்ளும் அளவிற்குச் செந்தீ இலங்கை மாநகரை முற்ற உண்டு தெவிட்டி இருந்தது என்பது தெரிகிறது. இராவணன் கூற்றின் ஒரு பகுதியைத் தான் நம்பிள்ளை காட்டினார்.

ஆழ்வார் பாசுரத்தில் "ஊட்டிய " என்ற சொல்லின் ஆற்றலால் தெவிட்டவும் விடாது அந்தத் தீயை உண்ணச் செய்தான் என்பது பெறப்படுவதால் அந்நிலைக்குத் தக்க மேற்கோளாக்க கம்பரின் வாக்கினை எடுத்து காட்டியுள்ளார்.

இராமானுசர் காலத்தில் திருவரங்கம் பெரிய கோயிலில் அத்யயனப் பெரு விழாவில் கம்பராமாயண பாடல்களும் அரையர் பெருமக்களால் நம்பெருமாள் திருமுன்பு தாளம் கொண்டு இசைக்கபட்டன.

பகல்பத்து திருமொழி திருநாளில்,

ஓ மண்ணளந்த தாளாளா வரையெடுத்த தோளாளா

என்தனக்கோர் துணையாளனாகாயே (பெரிய திருமொழி **3–6–5)**

என்ற பாசுரத்தை பாடி அரையர்கள் நிறுத்திவிடுவர். பிறகு மாலை நிகழ்ச்சியில், எம்பெருமான் திருவுலகளந்த வரலாற்றை நாடகமாக நடித்துக் காட்டுவர். அப்போது வாமனன் வரலாற்றை சொல்லும்போது, கம்ப ராமாயணத்தில் வேள்விப் படலத்திலிருந்து வாமனாவதார வருணனைப் பகுதியில் வரும் பாடல்களை நம்பெருமாள் திருமுன்பு இசையோடு சேவிப்பதை இன்றும் காணலாம்.

கம்பர் பாடியதாகக் கருதப்பெறும் மூன்று தனிப்பாடல்கள் முறையே திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகிய பிரபந்தங்களின் முடிவில் அனைத்து வைணவர்களாலும் இன்றும் ஓதப்பெறுகின்றன.

திவ்விய பிரபந்த உரையாசிரியரான மணவாளமாமுனிகள் இராமானுச நூற்றந்தாதி வியாக்கியானத்தில் கம்பர் பெருமானை "மஹா கவி " என்று குறிப்பிட்டு சிறப்பித்துள்ளார்.

பண்டைய வைணவ உரையாசிரியர் பரம்பரையில் வந்த அண்மைக்கால ஆசாரியப் பெருமக்களும் கம்பரைக் கற்று விளக்கி அருந்தொண்டுகள் ஆற்றியுள்ளனர்.

வைத்தமாநிதி முடும்பை சடகோபராமானுஜாச்சாரியார், கோபால கிருஷ்ணமாசாரியார், சே.க்ருஷ்ணமாச்சார்யார், ஸ்ரீகாஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியார், இன்னும் மற்றும் பலர் கம்பராமாயண உரையாசிரியராகத் திகழ்ந்தனர்.

மதுரை டீ.கே.ராமாநுஜய்யங்கார் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட கம்பராமாயண பதிப்பில் பல படலங்களுக்கு உரை வரைந்து பதிப்பாசிரியர் குழுவில் சீரிய பணியாற்றினார்.

மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவர்களாய்த் திகழ்ந்த திருநாராயணய்யங்கார், அப்பனையங்கார், ஸுதர்சனர் எஸ்.கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் மற்றும் பலர் கம்பரைப் பல வகையாலும் ஆராய்ந்து அறிய கட்டுரைகள் வரைந்துள்ளனர்.

நெல்லை வழக்கறிஞர் பக்ஷிராஜய்யங்கார், வானமாமலை வித்வான் என்.எஸ். க்ருஷ்ணய்யங்கார் இன்னும் மற்றும் பலர் கம்பராமாயண சொற்பொழிவாளர்களாகப் பணியாற்றினர்.

இனி, திருவரங்கம் மஹாகவி கம்பன் திருமுற்றம் எதிர்காலத்தில் ஈடு இணையற்ற பணிகளைச் செவ்வனே ஆற்றிப் புகழ் பரப்பும் என்று எதிர்பார்க்கலாம்.

கம்பன் வாழ்க ! கன்னித் தமிழ் வாழ்க!

காரிமாறப்பிரான் கழல்கள் வாழ்க!!

கீதாசார்யன் ஆசிரியர் ஸ்ரீவேங்கடேச்வரா பக்தி தொலைக்காட்சியில் (SVBC 2) தினந்தோறும் காலை 6.00 மணிக்கு வழங்கி வரும் **ஆசார்யர் அமுதம்**, பொதிகைத் தொலைக்காட்சியில் தினந்தோறும் வழங்கிவந்த **நாள்தோறும் நாலாயிரம்** ஆகியவற்றின் அனைத்துப் பதிவுகளையும் youtube.comல் எப்போது வேண்டுமானாலும் பார்க்கலாம்.

# உதகஶாந்தியின் உட்பொருள்

ஸ்ரீமதுபயவே. வில்லூர் நடாதூர் ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸனம் சாஸ்த்ரஸாஹித்யவல்லப
டாக்டர் கருணாகராசார்யஸ்வாமி

அடுத்து பர்யாப்தி ஹோமத்தின் நான்காவது மந்திரம்.இதன் முழு வடிவம் ‘‘ப்ருதிவ்யந்தரிக்ஷந்த்யௌர்வஷட்த்ஸ்வாஹா நம:’’ என்பது.

சென்ற காலம் நிகழ்காலம் எதிர்காலம் என்ற முக்காலங்களையும் சரீரமாக உடையவன் எம்பெருமான். எனவே அவைகளைக் குறிக்கையில் அவனே குறிப்பிடப் படுகிறான் என்ற பக்தனின் மன நிறைவின் அதாவது பர்யாப்தியின் அடிப்படையில் பர்யாப்தி ஹோமத்தின் முதல் மந்திரம் அமைந்தது

அடுத்து ருக் ஸாமம் யஜுஸ் என்ற மூன்று வேதங்களாலும் உணரப்படுபவன் அவன். எனவே அவனை உணர்த்தும் வேதங்களையே உணர்த்தப்படும் அவனாக உணர்வதும் சுவையானதே என்ற அடிப்படையில் பர்யாப்தி ஹோமத்தின் இரண்டாம் மந்திரம் அமைந்தது.

அவ்வோ வேதங்களிலே அமைந்துள்ள ருக் அதாவது செய்யுள் வடிவங்களில் உள்ள மந்திரங்கள் அனைத்தும் யாப்பிலக்கணத்தின் கட்டமைப்பிலேயே இருப்பதால் மூன்று முக்கிய யாப்புக்களைத் தேர்ந்து எடுத்து அவைகளில் அமைந்த செய்யுள் மூலம் உணரப் படும் அவனையே அந்த யாப்புக்களாக வழிபடும் முறையில் பர்யாப்தி ஹோமத்தின் மூன்றாம் மந்திரம் அமைந்தது. இந்நிலையில் நான்காம் மந்திரம் அமையும் பின்னணியைச் சிறிது பார்ப்போம்.

ஆழ்வார் திருவாய்மொழியில் ஏழாவது பத்தின் நிறைவில் திருவாறன்விளை என்னும் மலை நாட்டுத் திருப்பதியில் எம்பெருமான் பிராட்டிமார்களுடன் பேரோலக்கத்திலே வீற்றிருக்கத் தான் திருவாய்மொழி விண்ணப்பம் செய்யும் பேறு கிட்டும் என்ற பேரவாவுடன் இருந்தார். ஆனால் அது நடக்கவில்லை.

அவன் எல்லை கடந்த கல்யாணகுண நிதி. எனவே அவன் அடியவர்க்கு அத்தகைய அருள் செய்யாமல் இருக்கவே மாட்டான். ஆனாலும் தனக்கு அவ்வருள் கிட்டவில்லையே என்று பதறிய ஆழ்வார் ஒருக்கால் அவனை அத்தகைய கல்யாண நிதி எனத் தான் புரிந்து கொண்டது தான் தவறோ என்று எண்ணும் நிலைக்குத் தள்ளப் பட்டார்.

அதனால் அவனுடைய பெருமை தரும் பண்புகளை எல்லாம் ஒரு பட்டியலிட்டுப் பாடி இத்தகைய உன்னைக் காணுமாறு உடனே அருள் என்று கதறுகிறார்.இப்படி எட்டாம் பத்து தொடங்கிடுகின்றது.

எம்பெருமானிடம் உள்ள பண்புகளின் பட்டியலை இட்டு அவர் பாடியருளும் எட்டாம் பத்தின் முதல் பாசுரத்தைப் பாருங்கள்:

தேவிமாராவார் திருமகள் பூமி ஏவ மற்றமரர் ஆட்செய்வார்
மேவிய உலகம் மூன்றவை யாட்சி வேண்டு வேண்டுருவம் நின்னுருவம்
பாவியேன் தன்னை அடுகின்ற கமலக் கண்ணது, ஓர் பவள வாய் மணியே!
ஆவியே அமுதே ! அலை கடல் கடைந்த அப்பனே !, காணுமாறு அருளாய். 1

இப் பாட்டுக்கான அடியேனுடைய பிதாமஹரின் ப்ரதிபிம்பலஹரீ ச்லோகம்:
தேவ்யௌ தே ஸ்ரீபுவௌ ஸ்தஸ்ததிரவிபுதா: கிங்கராஸ்தே யதாஜ்ஞம்
பால்யா லோகாஸ்த்ரயஸ்தே தவ து பரிசிதாஸ்ஸ்வேஷ்டரூபம் ச ரூபம்
பாபம் மாம் பீடயேத்; ஸ்வம்பஜத்ருகதரஸத்வித்ருமாநீலரத்ன!
ப்ராணாதாராம்ருதோர்ம்யம்புதிமதக! பிதர்தர்சனே தே தயேதா:
இப் பாட்டில்

1.எம்பெருமானுக்கு ஸ்ரீதேவீ பூ தேவீ ஆகிய இருவரும் முக்கியமான தேவீமார்கள்.

2.அவனுக்குப் பல விதத்தில் ஒத்த நித்யஸூரிகளும் முக்தர்களும் அவனும் தேவீமார்களும் கூவி ஏவல் தர அதைச் செய்பவர்கள்.

3.எம்பெருமானால் தனது என்று ஏற்கப்பட்ட மூன்று உலகங்களும் அவனுடைய ஆட்சியினில்உள்ளவை

4. அவனுடைய வடிவங்கள் அவனுடைய அடியவர்களும் அவனும் விரும்பிய படி அமைந்தவை.

என்று இவ்வாறாக அவன் மேன்மையினை அவர் பல படியாக பட்டியல் இட்டருளுவதைப் பார்க்கிறோம்

இங்குப் பர்யாப்தி ஹோமத்தின் நான்காவது மந்திரத்தை அனுபவிக்க நமக்கு ''மேவிய உலகம் மூன்று அவை ஆட்சி'' என்ற தொடரின் அனுபவம் உதவிடும்.

மேற்படி ''மேவிய உலகம் மூன்று அவை ஆட்சி'' என்ற தொடருக்குப் பல விதமாகப் பொருள் கொள்ள முடியும் என்று முன்னோர் காட்டிப் போந்தார்கள்.

நம்பிள்ளை ஈட்டிலே 1. கீழும் மேலும் நடுவுமான லோகங்களைச் சொல்லுதல்; 2. த்ரிவித சேதனரையும் அசேதனரையும் சொல்லுதல்; என்ற இரு பொருள்கள் பதிவாகியுள்ளன.

பெரியவாச்சான் பிள்ளையின் இருபத்து நாலாயிரப்படியில் 1. பத்தரும் முக்தரும் நித்யஸித்தரும் என்னுதல்; 2.மேலும் கீழும் நடுவுமான சதுர்தச புவனம் என்னுதல்; என்று அதே இரு பொருள்கள் காட்டப் படுகின்றன.

உரைகாரரின் பன்னீராயிரப்படியில் 'ப்ரதான–புருஷ–காலாத்மகமான த்ரைவித்யம்' என ஒரு மூவகை சொல்லப் பட்டது.

ஸாக்ஷாத்ஸ்வாமியின் சப்தார்த்தத்தில் 'த்ரிவித–சேதனாசேதனங்கள் என்றபடி' என்று மூவகை சொல்லப் பட்டது.

ஆனால் பிள்ளான் ''நிகில–புவன–நிர்மாண–த்ராண ஸம்ஹாராதிலீலனாய்'' என்ற தொடரை இட்டு உலக மூன்றவை ஆட்சி என்ற பாசுரப் பகுதிக்கு வ்யாக்யானம் செய்கிறார்.

கீழும் மேலும் நடுவுமான லோகங்களை என்று ஈடும், மேலும் கீழும் நடுவுமான சதுர்தச புவனம் என்று பெரியவாச்சான் பிள்ளையும் காட்டும் விளக்கத்துக்கு இலக்கான வ்யாக்யானமிது.

மூவகை உலகங்களும் நிர்மாணம் செய்யப்படுவது அவனால். அவைகளை த்ராணம் செய்வதும் அவனே.அவைகளை ஸம்ஹரிப்பதும் அவனே.

அதாவது மூவகை உலகங்களும்அவனிடம் இருந்து தோன்றிடுவதால் தஜ்ஜங்கள் ஆகின்றன. அவைகள் அவனிடமே லயம் அடைகின்றன. எனவே தல்லங்கள் ஆகின்றன.

இப்படி அவை தஜ்ஜங்களாகவும் தல்லங்களுமாகவும் இருப்பதை இணைத்து அவைகள் தஜ்ஜலங்கள் ஆகின்றன எனலாம்.

அவைகள் அவனால் காக்கப்படுகின்றன. அதாவது உயிர்ப்பிக்கப் படுகினறன. அன – ப்ராணனே என்கின்ற என்ற வினை வேரிலிருந்து தேன ப்ராணிதி என்ற அடிப்படையில் அவனாலே உயிர்ப்பிக்கப் படுகின்ற பொருள் ததன் எனப்படும்.

தஜ்ஜலங்களே ததன்களும் ஆகையில் தஜ்ஜலான் என்ற ஒரே சொல் ஆகி மூன்றையும் குறிப்பிடும் அல்லவா.

அவனிடம் இருந்து தோன்றி அவனுள் லயமடைந்து அவனால் உயிர்ப்பிக்கப் படும் பொருள் தஜ்ஜலான் எனப்படும் என்ற இதை அசை போடுவோம்.

அனைத்துப் பொருள்களும் அதாவது அனைத்து உலகமும் எம்பெருமானாகின்ற அவனிடம் இருந்து தோன்றி அவனுள் லயமடைந்து அவனால் உயிர்பிக்கப் படுவதனால் தஜ்ஜலான் எனப்படும்.

தஜ்ஜலான்– தஸ்மாஜ்ஜாதே தஸ்மிந் லீநே தேந ஸ்திதே பதார்த்தே ச என்ற ஒரு வாய்ப்பாடு இங்கு உணரத் தக்கது.

இப்படி தத் என்கிற அவனையும் தஜ்ஜலானாக இருப்பவைகளையும் ஒன்றாகவே கருதிடுவது உண்டு.

அதனால் தான் சாந்தோக்ய உபநிஷத்தில் ஸ்ரீசாண்டில்ய பகவான் "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம தஜ்ஜலான்" என்று தனது ப்ரஹ்மானுபவத்தைப் பகிர்ந்து கொள்கையிலே அருளினார்.

இதனால் அனைத்து உலகமே அவன் என்ற அனுபவத்தை பூலோகம் அந்தரிக்ஷ– உலகம் வானுலகம் என்று மூன்றை எடுத்துக் காட்டிக் கூறி நமக்கு அவன் பெருமையை உணர்த்தும் வகையில் "ப்ருதிவ்யந்தரிக்ஷந்த்யௌர்வஷட்த்ஸ்வாஹா நம:" என்று பர்யாப்தி ஹோமத்தின் நான்காவது மந்திரம் அமைகின்றது. (தொடரும்)


## நூற்றெட்டு திவ்யதேசங்கள் - நூல் பரிந்துரை

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்தாய நூல்களை எவர் வெளியிட்டாலும் அவர்கள் நாடுவது திருவல்லிக்கேணியிலுள்ள ஆர்.என்.ஆர். பதிப்பகத்தைத்தான். (நம்முடைய கீதாசார்யன் பத்திரிகையும் அங்குதான் அச்சாகின்றது என்பது அனைவரும் அறிந்ததேயாகும்.) இதற்குக் காரணம் ஸம்ப்ரதாயத்தின் நுட்பங்களை நன்கு தெரிந்து கொண்டு அச்சிடும் வகையில் மிகவும் கவனத்துடன் செயல்படும் அச்சகத்தின் உரிமையாளர் திரு ராஜன் அவர்களின் திறமையே ஆகும். தற்போது இந்த அச்சகத்தின் 25ம் ஆண்டு வெள்ளிவிழாவை முன்னிட்டு நூற்றெட்டு திவ்யதேசங்களைப் பற்றிய அற்புதமான நூல் வெளியிடப் பட்டுள்ளது. நூற்றெட்டு திவ்யதேசங்களைப் பற்றிய முக்கியமான செய்திகள், அந்தந்த திவ்யதேசத்து எம்பெருமானின் வண்ணப்படங்கள், மற்றும் முக்கியமான பாசுரங்கள், அவற்றின் விளக்கங்கள் அனைத்தும் இடம்பெறும் வகையில் மிகப் பெரிய அளவில் (Double Demy Size ) 428 பக்கங்களும் அழகிய ஆர்ட் காகிதத்தில் அச்சிடப் பெற்றுள்ளது. இது போன்ற ஒரு புத்தகம் இதுவரை வந்ததில்லை. இவ்வளவு சிறப்புகள் பொருந்திய இப்புத்தகத்தின் விலை ரூ.1200/- என்பது மிகவும் குறைவே என்பது நமது கருத்து. ஒவ்வொருவருடைய இல்லத்திலும் கண்டிப்பாக இருக்க வேண்டிய புத்தகம் இது. கிடைக்குமிடம் : ஆர்.என்.ஆர். அச்சகம், 19, தாண்டவராயன் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005. தொலைபேசி: 044-8441856

# ஸ்ரீராமாயணமும் திருப்பாவையும்

T.C.A. வெங்கடேசன்

### 16.1 நாயகனாய் நின்ற

இப்பாசுரத்திலே நமக்கு விஷயமாகிறது 'நென்னலே வாய் நேர்ந்தான்' என்னும் சொற்கள். இதற்கு முன் பத்துப் பாட்டுக்களினாலே, உணர்ந்தெழுந்தவர்கள் இன்னம் உறங்கிக் கிடப்பவர்களை எழுப்ப, எல்லோரும் கூடி ஸ்ரீநந்தகோபர் திருமாளிகையை அடைந்து அங்குள்ள திருக்கோயில் காப்பானையும் திருவாசல் காப்பானையும் இப்பாட்டிலே எழுப்புகிறார்கள். பத்துப் பெண்களே எழுப்பபட்டார்கள் எனில், அது திருவாய்ப்பாடியிலுள்ள பஞ்சலக்ஷம் குடிப் பெண்களையும் எழுப்பியதாம்.

"நிவேதயத மாம்" என்று விபீஷணாழ்வான் சொன்னபடி ததீயரை முன்னிட்டே எம்பெருமானைப் பற்ற வேண்டும் என்கின்ற அநுஷ்டானத்தினால் கோயில் காப்பானையும் வாசல் காப்பானையும் முன்னிடுகின்றனர். ததீயரை அன்றி முறைகேடாகப் பற்றினால் சூர்ப்பணகை பட்ட பாடு பட வேண்டும் என்கிறார் பெரியவாச்சான் பிள்ளை. "வில்லிபுதுவை விட்டுசித்தர் தங்கள் தேவரை வல்ல பரிசு வருவிப்பவரேல் அது காண்டும்" என்று நாச்சியாரே உரைத்தாரிறே.

இவர்கள் உபகாரர்கள் ஆகையாலே 'நாயகர்' என்று அழைக்கிறார்கள். "நீரிலே நெருப்பு கிளருமா போலே குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தாலே சீற்றம் பிறந்தால்" பொறுப்பது புருஷகாரபூதர்களாலே என்பதால் அவர்களை 'நாயகர்' என்று அழைக்கின்றனர். அன்றிக்கே, 'நாயகன்' என்று ஸ்ரீநந்தகோபரைச் சொன்னார்கள் என்னவுமாம்.

முதலடியில் திருக்கோயில் காப்பானையும் இரண்டாம் அடியில் திருவாசல் காப்பானையும் உணர்த்துகின்றனர். இது வெளிவாசலைக் காப்பவனையும் உள்வாசலைக் காப்பவனையும் கூறுகிறது என்று பெரியோர் பகர்வர். ஆயர்சிறுமியர் ஆகையாலே கோயில் காப்பானே என்று அவன் தொழிலையிட்டு அழைக்கிறார்கள். அது அவனுக்கும் உகப்பாகையாலே அப்படி அழைக்கின்றனர் என்னவுமாம்.

கண்ணாலே அவர்களை உள்ளே போகும்படி எவன் சொல்ல, அடுத்து திருவாசல் காப்பானை உணர்த்துகிறார்கள்.

க்ஷேத்ராதிபதியை கோயில் காப்பான் என்றும், த்வாராத்யக்ஷரை திருவாசல் காப்பான் என்றும் சொன்னார்கள். அன்றிக்கே, இரண்டாலும் ஒருவனையே சொன்னார்கள் என்னவுமாம்.

கதவைத் திற என்று இவர்கள் சொல்ல, பயம் நடமாடும் தேசத்திலே நடு இரவில் வந்து திறக்க அழைப்பவர்கள் யார் என்று வாசல் காப்பவன் கேட்டான். அதற்கு அவர்கள், "பயாநாம் அபஹாரி" என்றிருப்பவன் இடத்தில் பயம் என்ன என்று கேட்டார்கள். அதற்கு அவன் இது அயோத்தியன்று, கம்ஸன் ராஜ்யத்தின் அருகில் இருக்கும் இடைச்சேரி என்றான். நாங்கள் பெண்கள், பயமென் என்று அவர்கள் சொல்ல, "அஞ்சுவன் வெஞ்சொல் நங்காய்! அரக்கர் குலப் பாவை தன்னை" என்று பின்னானாரும் அச்சப்படும்படி நலிந்தது சூர்ப்பணகை என்னும் பெண்ணன்றோ என்றான் அவன். அதற்கு அவர்கள், அவள் அரக்கி, நாங்கள் இடைப்பெண்கள்

என்றனர். அவனோ பூதனையும் ஆய்ப்பெண்ணாக வந்தவளன்றோ என்ன, நாங்கள் 'ஆயர் சிறுமியரோம்' என்றனர்.

ஆகில், எதற்கு வந்தீர்கள் என்ன, பறை வேண்டி வந்தோம் என்றனர். திருப்பள்ளி உணர்ந்த பின் விண்ணப்பம் செய்கிறோம் என்று அவன் கூற, அவர்கள் அதற்குக் கூறும் பதிலே நமக்கு விஷயமாயிற்று.

நீ இன்று சொல்ல வேண்டாதபடி முன்னமே அவன் சொல்லி இருக்கிறான் என்கின்றனர். மாயனும் மணிவண்ணனுமான எம்பெருமான் புஷ்பம் அலர்ந்தால் போல் சோதி வாய் திறந்து சொன்ன அழகை அநுபவித்துச் சொல்லுகிறார்கள். ரிஷியும் பெருமாளின் வாக்கை "வாங்க்மீ ஸ்ரீமாந்" என்று கொண்டாடினானிறே.

உன் காலைப் பிடித்து நாங்கள் வேண்டும் இன்றா அவன் சொல்ல வேண்டியது, முன்னர் முன்னமே சொன்ன விஷயமன்றோ என்கின்றனர்.

அப்படிச் சொல்லி இருந்தாலும் அது உண்மையாக வேண்டுமோ என்று அவன் சொல்ல, த்ரௌபதியிடம் "வானம் கீழே விழக் கூடும், பூமி நொறுங்கக் கூடும், இமய மலை பொடியாகக் கூடும், கடல் வற்றக் கூடும், ஆனால் என் வார்த்தை பொய்க்காது" என்று அவனே சொன்னானே, அது பொய்யானால் அன்றோ இதுவும் பொய்யாவது என்றனர்:

த்யௌ: பதேத் ப்ருதிவீ சீர்யேத் ஹிமவாந் சகலீபவேத்

சுஷ்யேத் தோயநிதி: க்ருஷ்ணே! ந மே மோகம் வசோ பவேத்

"ராமோ த்விர்நாபி பாஷதே" என்றும், "அந்ருதம் நோக்தபூர்வம் மே ந ச வக்ஷ்யே கதாசந" என்றும் அவனே சொன்னதில்லையோ? செய்ய நினைக்கா விட்டால் சொல்ல மாட்டான், சொன்னால் செய்யாமல் இருக்க மாட்டான், என்கின்றனர்.

இப்படிச் சொல்லி தூய்மையுடன் வந்த எங்களுக்காக மறுக்காமல் நேச நிலைக் கதவத்தை நீயே திறக்க வேண்டும் என்றனர்.

இவர்கள் 'நென்னலே வாய் நேர்ந்தான்' என்று சொன்னது ஸ்ரீக்ருஷ்ணன் தேர்த்தட்டிலே நின்று அர்ஜுநனுக்குச் சொன்ன சரம ச்லோகத்தையே என்று பெரியோர் பணிப்பர்.

### 16.2 ஸ்ரீராமாயண காட்சி - 1

பெருமாள் வாநர சேனையுடன் இலங்கையில் போரிட வந்துள்ளார் என்பதை அறிந்த "குன்றாத வலி அரக்கர் கோன்" இராவணன், தன் மந்திரிமார்களையும் பிள்ளைகளையும் தம்பிமார்களையும் அழைத்து மந்த்ராலோசனை செய்தான்.

வலி மிக்கவர்களே! வெற்றி என்பது முன்யோசனையில் உள்ளது என்று அறிவாளிகள் சொல்வர். ஆகவே, ராமனைப் பற்றி ஆலோசிக்க விரும்புகிறேன் என்றான்:

மந்த்ர மூலம் ஹி விஜயம் ப்ராஹுரார்யா மநஸ்விந:

தஸ்மாத் வை ரோசயே மந்த்ரம் ராமம் ப்ரதி மஹாபலா:

அதற்கு மதிகெட்ட அரக்கர்கள் 'ஹே ராஜன்! இரும்பு உலக்கைகளும், ஈட்டிகளும், இருபுறமும் கூரான வாட்களும், கூரிய வேல்களும் கொண்ட நம்முடைய சேனையானது மிகப் பெரிதானது. நீ ஏன் கவலை கொள்கிறாய்' என்றனர்:

ராஜந் பரிக சக்தி ருஷ்டி சூல பட்டஸ ஸம்குலம்

ஸுமஹந் நோ பலம் கஸ்மாத் விஷாதம் பஜதே பவாந்

தாங்கள் ஒவ்வொருவருமே ஸுக்ரீவ மஹாராஜரையும், இலக்குமணனையும் அநுமனையும், அங்கதனையும் ஏனைய வாநரங்களையும், பெருமாளையும் கொல்வோம் என்றனர்:

அஹம் ஏகோ ஹநிஷ்யாமி ஸுக்ரீவம் ஸஹ லக்ஷ்மணம்

ஸ அங்கதம் ச ஹநூமந்தம் ராமம் ச ரண குஞ்ஜரம்

அப்பொழுது விபீஷணாழ்வான் அந்த அவையில் நல்வார்த்தைகள் பல சொன்னான்.

வீரரும் தர்மத்தின் வழி நடப்பவருமான பெருமாளுடன் அவசியமின்றி பகைமை கொள்வது முறையன்று. எனவே, பிராட்டியை அவரிடமே கொடுத்து விடலாம், என்றான்:

ந ந: க்ஷமம் வீர்யவதா தேந தர்ம அநுவர்திநா

வைரம் நிரர்தகம் கர்தும் தீயதாம் அஸ்ய மைதிலீ

பிறகு தன் அரண்மணைக்குத் திரும்பிய அரக்கர் கோமானுடன் சென்ற விபீடணன், தான் கண்ட துர்நிமித்தங்களைச் சொல்லி ராகவனிடத்தில் சீதா பிராட்டியைக் கொடுப்பத்தே ("வைதேஹீ ராகவாய ப்ரதீயதாம்") நல்லது என்றான்.

மீண்டும் அவைக்குத் திரும்பிய ராவணனிடம் மறுபடியும் பிராட்டியை பெருமாளிடத்தில் கொடுக்கும்படி ("நரேந்த்ரபுத்ராய ததாது மைதிலீம்") உபதேசித்தான்.

ஆனால் துர்மதி கொண்ட இந்திரஜித் கடும்சொற்களைச் சொல்ல, அரக்கர் தலைவனும் விபீடணனைக் குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக்கொம்பு ("குல பாம்ஸநம்") என்று வெறுத்துப் பேசினான். கொடிய அவ்வார்த்தைகளை செவிமடுத்த தர்மவானான விபீடணன் கதை ஏந்திய தானும் நான்கு அரக்கர்களுமாக வானில் புறப்பட்டான்:

இதி உக்த: பருஷம் வாக்யம் ந்யாயவாதீ விபீஷண:

உத்பபாத கதாபாணி: சதுர்பி: ஸஹ ராக்ஷஸை:

அங்கிருந்து கிளம்பி ஐவரும் உடனே ராம லக்ஷ்மணர்கள் இருந்த இடத்தை அடைந்தனர்:

ஆஜகாம முஹூர்தேந யத்ர ராம: ஸலக்ஷ்மண:

எல்லா உலகிற்கும் ரக்ஷகரும் மேலானவருமான ராகவனிடத்தில் தான் வந்திருப்பத்தைச் சொல்லி அவரிடம் தன்னை உடனே விநியோகிக்கும்படி வாநரங்களிடத்தில் விண்ணப்பித்தான் விபீடணன்:

நிவேதயத மாம் க்ஷிப்ரம் ராகவாய மஹாத்மநே

ஸர்வ லோக சரண்யாய விபீஷணம் உபஸ்திதம்

அப்பொழுது அவனை அங்கீகரிக்கலாமா கூடாதா என அனைவரும் பலவாறாக விவாதிக்க, அறிவில் சிறந்தவரான பெருமாளே இதற்கு முடிவெடுக்க வேண்டும் என்று திருவடி விண்ணப்பித்தார்:

ப்ரமாணம் து சேஷஸ்ய ச்ருத்வா புத்திமதாம் வர

அப்பொழுது பெருமாள் 'நென்னலே வாய் நேர்ந்த' உயிரான வார்த்தைகள் காண்மின்.

குற்றம் உடையவனாய் இருப்பினும் நண்பன் என்ற தோற்றம் மட்டும் கொண்டு ஒருவன் வருவானாகில் அவனை எக்காராணத்திற்காகவும் நான் கைவிட மாட்டேன்; இதை நல்லோர்கள் குறை சொல்ல மாட்டார்கள்:

மித்ர பாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந

தோஷோ யதி அபி தஸ்ய ஸ்யாத் ஸதாம் ஏதத் அகர்ஹிதம்

ஸ்ரீராம சரம ச்லோகம் என்று பெரியோரால் கொண்டாடப்படும் மேலான வார்த்தையையும் அடுத்து வாய் நேர்ந்தார் பெருமாள் என்று காண்கிறோம். 'நான் உன்னுடையவன் என்று எவன் ஒருவன் என்னிடம் ஒரு முறை தஞ்சம் புகுகிறானோ, அவனை எல்லாவற்றினிடத்திலிருந்தும் ரக்ஷிப்பேன் என்ற நிச்சயத்தை அளிக்கிறேன்; இது எனது உறுதிமொழி' என்றார் ராகவன்:

ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே

அபயம் ஸர்வ பூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம

## 16.3 ஸ்ரீ ராமாயண காட்சி - 2

"மாறில் போரரக்கன் மதிள் நீறெழச் செற்றுகந்த" பெருமாள், "அவன் தம்பிக்கு அரசும் ஈந்து", பிறகு திருவடியின் மூலமாகப் பிராட்டிக்கு இவ்விஷயத்தைத் தெரிவித்தார்.

உத்தம வார்த்தைகளை உடைய அநுமனே! நானும் இளவலும் ஸுக்ரீவனும் நலமுடன் இருப்பதையும், போரில் ராவணன கொல்லப்பட்டான் என்பதையும் வைதேஹிக்குச் சொல்லுவாய் என்றார்:

வைதேஹ்யை மாம் குசலிநம் ஸுக்ரீவம் ச ஸலக்ஷ்மணம்

ஆசக்ஷ்வ வததாம் ச்ரேஷ்ட ராவணம் ச ஹதம் ரணே

இலங்கை புக்க திருவடி விபீஷணாழ்வானுடைய அனுமதியைப் பெற்றுக் கொண்டு அசோக வனத்திற்குள் நுழைந்தார்:

ப்ரவிச்ய ச புரீம் லங்காமநுஜ்ஞப்ய விபீஷணம்

ததஸ்தேந அப்யநுஜ்ஞாதோ ஹநூமாந் வ்ருக்ஷவாடிகாம்

அவரைப் பார்த்ததும் முன்னர் நடந்ததை நினைத்த பிராட்டி உவந்தாள்:

த்ருஷ்ட்வா ஸ்ம்ருத்வா ஹ்ருஷ்டா அபவத் ததா

"பெருந்தேவீ! கேட்டருளாய்", விபீடணன் மற்றும் வாநரங்களின் துணை கொண்டு ராம லக்ஷ்மணர்கள் வீரனான ராவணனைக் கொன்றனர். எதிரிகளை அழிப்பவரான ராமன், தன் கார்யத்தை முடித்துக் கொண்டு தன் நலனை உங்களிடம் சொல்லச் சொன்னார்:

குசலம் சாஹ ஸித்தார்தோ ஹத சத்ரு: அரிந்தம:

விபீஷண ஸஹாயேந ராமேண ஹரிபி: ஸஹ

நிஹதோ ராவணோ தேவி லக்ஷ்மணஸ்ய நயேந ச வீர்யவாந்

இனி உமக்குப் பயம் இல்லை ("ஸம்ப்ரமச்ச ந கர்தவ்யோ") என்ற திருவடியிடம் முதலில் ஒன்றும் பேசாமலிருந்த பிராட்டி, அது தன் கணவனின் வெற்றியைக் கேட்டதனாலேயும், அத்தால் விளைந்த பேராநந்தத்தினாலேயும் என்றாள்:

ப்ரியம் ஏதத் உபச்ருத்ய பர்து: விஜய ஸம்ச்ரயம்

ப்ரஹர்ஷவசம் ஆபந்நா நிர்வாக்யாஸ்மி க்ஷணாந்தரம்

பிறகு இருவரும் ஸம்பாஷிக்கையில், பிராட்டியை முன்னர் நலிந்திருந்த அரக்கியரைக் கொல்ல அனுமதி கேட்டார் அநுமன்:

இமாஸ்து கலு ராக்ஷஸ்யோ யதி த்வம் அநுமந்யஸே

ஹந்தும் இச்சாமி தா: ஸர்வா யாபிஸ்த்வம் தர்ஜிதா புரா

மேன்மை பொருந்தியவளே! முன்னர் உம்மைத் துன்புறுத்திய கோரமான ரூபம் கொண்ட இவ்வரக்கியரை அடித்தே அழிப்பேன் என்றார்:

ஏவம் ப்ரகாரை: பஹுபி: விப்ரகாரை: யசஸ்விநி
காதயே தீவ்ர ரூபாபி: யாபி: த்வம் தர்ஜிதா புரா

இதற்கு முன் அசோக வனத்தில் ராவணனிடம் சிறையிருந்தவளான பிராட்டியை, பெருமாளுடைய தூதனாகத் திருவடி சந்தித்த போது, அரக்கியர் அவளை நலிவதை நேரிலே கண்டிருந்தார்.

ராவணன் அகன்ற பின் பிராட்டியை நெருங்கிய அரக்கிகள் கோபத்தினால் மயங்கி கொடிய வார்த்தைகளைப் பேசினர்:

தத: ஸீதாம் உபாகம்ய ராக்ஷஸ்ய: க்ரோத மூர்சிதா:
பரம் புருஷயா வாசா வைதேஹீம் இதம் அப்ருவந்

தாங்கள் சொல்வதை உடனே கேட்காவிட்டால், அவளைத் தின்று விடுவோம் என்றும் கூறினர்:

ஏதத் உக்தம் ச மே வாக்யம் யதி த்வம் ந கரிஷ்யபி
அஸ்மிந் முஹூர்தே ஸர்வாஸ்த்வாம் பக்ஷயிஷ்யாமஹே வயம்

இவர்கள் இப்படி நலிவதை சிம்சுபா மரத்தில் ஒளிந்திருந்து கேட்டார் திருவடி:

அவலீந: ஸ நிர்வாக்யோ ஹநுமாந் சிம்சுபா த்ருமே
ஸீதாம் ஸம்தர்ஜயந்தீஸ்தா ராக்ஷஸீ: அச்ருணோத் கபி:

அதை நினைவில் கொண்டே அவர்களைக் கொல்லும் எண்ணத்தை வெளிப்படுத்தினார் அவர். அப்பொழுது அவ்விடத்தில் பிராட்டியின் வார்த்தைகள் காண்மின்.

வாநரோத்தமனே! தங்கள் அரசன் கட்டளைப்படி நடந்த வேலைக்காரிகள் மீது எவரால் கோபம் கொள்ள முடியும் :

ராஜ ஸம்ச்ரய வச்யாநாம் குர்வதீநாம் பராஜ்ஞயா
விதேயாநாம் ச தாஸீநாம் க: குப்யேத் வாநரோத்தம

அவர்களை மன்னித்து விட்டேன் ("தாஸீநாம் ராவணஸ்ய அஹம் மர்ஷயாமி இஹ") என்னும் பிராட்டி, அங்கு நென்னலே வாய் நேர்ந்த உயிரான வார்த்தை காண்மின்.

குற்றம் புரிந்தவராயினும், நல்லவராயினும், கொலைத் தண்டனைக்கே உரித்தவராயினும், அவர்கள் உத்தமர்களின் கருணைக்கு இலக்கானவர்களே, குற்றம் செய்யாதவர் யவர், என்னும் இவ்வார்த்தை ஸீதா சரம ச்லோகம் என்று பெரியோரால் கொண்டாடப்படுகிறது:

பாபாநாம் வா சுபாநாம் வா வதார்ஹாணாம் ப்லவங்கம
கார்யம் காருண்யம் ஆர்யேண ந கச்சிந்நாபராத்யதி.


## திவ்யப்பிரபந்தத்தின் பொருளை அறிந்து கொள்ளுங்கள் M.A. பட்டமும் பெறுங்கள்

தஞ்சை சாஸ்த்ரா பல்கலைக் கழகத்தில் தொலைதூரக் கல்வி மையம் மூலம் **M.A.** திவ்யப்பிரபந்தம் என்ற பட்டப்படிப்பு நடைபெற்று வருகிறது. திருவாய்மொழி ஆயிரம் பாசுரங்கள் மற்றும் மூவாயிரத்தில் முக்கியமான பாசுரங்கள் ஆகியவற்றின் விளக்கங்கள் பாடத்திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. அவரவர்கள் இல்லத்தில் இருந்து கொண்டே கற்கக் கூடிய இவ்வகுப்பில் சேருவதற்கு B.A., B.Sc., B.Com அல்லது B.Lit போன்ற ஏதாவதொரு இளங்கலை (Bachelor Degree) படித்திருக்க வேண்டும். வயது வரம்பு இல்லை. சாஸ்த்ரா பல்கலைக் கழகத்தின் இணையதளத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

# பிள்ளைலோகாசார்யரின் ரஹஸ்யத்ரய விளக்க நூல்கள்

டாக்டர் கே.எஸ். உஷா

### 4.1.7 திருமந்திரத்தின் திரண்ட பொருள்

1. யாத்ருச்சிக்கப்படி: 'அனைத்திற்கும் காப்பாளனாய், யாவர்க்கும் ஸ்வாமியான நாராயணனுக்கே, பிறர்க்கும் எனக்கும் உரியவன் அன்றிக்கே இருந்துள்ள நான் அடிமை; அவனுக்கே நித்தியமாய்த் தொண்டு செய்யப் பெறுவேனாக வேண்டும்' என்று ப்ரார்த்தனை பண்ணப்பட்டது.

2. ச்ரிய:பதிப்படி: அகாரத்தாலே – எம்பெருமான் அனைவர்க்கும் காப்பாளன் என்றது. அதிலே மறைந்து கெட்ட நான்காம் வேற்றுமை உருபான 'ஆய' வினால் அவனுக்கே ஜீவாத்மாக்கள் அடிமை என்றது.

உகாரத்தால் – அவனைத் தவிர வேறு யாவர்க்கும் அடிமை அல்ல என்றது. மகாரத்தால், இப்படி அடிமைத்தனத்திற்கு இருப்பிடமான பொருள் அறிவிற்கு இருப்பிடமான ஆத்மா என்பதைச் சொல்லிற்று.

நமஸ்ஸாலே எம்பெருமானுக்கே ஆத்மா அடிமை என்பதற்கு விரோதியான அஹங்காரமும் மமகாரமும் விலகுதலையும், அடியார்க்கடிமை என்ற முடிந்த நிலத்தைத் தழுவிய பகவத் தாஸ்யம், அவனே உபாயம் என்பதையும் கூறிற்று.

நார சப்தம் அறிவுள்ள, அறிவில்லாத எல்லாப் பொருள்களையும் குறித்தது.

அயந சப்தம் எங்கும் வ்யாபித்திருக்கும் பெருமானின் தன்மையைச் சொல்லிற்று.

நான்காம் வேற்றுமையான 'ஆய' எம்பெருமானிடம் கைங்கர்ய ப்ரார்த்தனையைச் சொல்லி நிறைவுபடுத்துகிறது.

இவற்றை விளக்கும் ஆழ்வார் பாசுரங்கள்:

'விடையேழன்றடர்த்து – கண்ணபுரமொன்றுடையானுக்கு அடியேன் ஒருவர்க்கு உரியேனோ' என்பதால் 'எம்பெருமானுக்கு சேஷபூதனான நான் வேறுசிலர்க்கு உரியேனல்லேன்' என்கிற ப்ரணவத்தின் பொருள் தெளிவாகிறது.

'யானே என்னை யானே நீ; என்னுடைமையும் நீயே' என்பதால் 'யான் நீயே யென்னலாம்படி வேற்றுமையற்றிருப்பேன்; எனது உடைமைகளும் நீயிட்ட வழக்காயிருக்கும்' என்று நம: பதத்தின் பொருளை அருளிச்செய்கிறார்.

'எம்பிரானெந்தை என்னுடைச்சுற்றம் எனக்கரசு என்னுடை வாணாள்... நாராயணா வென்னும் நாமம்' என்பதால் 'எனக்குப் பல உதவிகள் செய்தவன், தந்தை, எல்லா உறவு முறைகள், தலைவன், விரோதிகளைப் போக்கி என்னை ஆட்கொண்டவன், என்னுடைய வாழ்வில் அனைத்துமாயும், ஸர்வஸ்வாமியாயுமிருக்கிற இனிமை படைத்தவன்' என்று நாராயண சப்தத்தின் பொருளாக அருளிச்செய்கிறார்.

‘ஒழிவில் காலமெல்லாம் வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்’ என்பதால் அனைத்துக் காலங்களிலும், எல்லா தேசங்களிலும், எல்லா நிலைகளிலும் நழுவுதலின்றி விடாதே எம்பெருமான் உகப்புக்காகத் தொடர்ந்து கைங்கர்யம் செய்யும் சதுர்த்தியில் கோரும் ப்ரார்த்தனையை அருளிச் செய்கிறார்.

திருமந்திரத்தின் பொருளை அறியும் முன் – ‘ஓம்’ என்பதின் பொருளான ஆத்மா எம்பெருமானுக்கு மட்டுமே (வேறொருவர்க்குமல்லாத) அடிமை என்னும் நம் உண்மை நிலையை நினைவில் கொள்ளாததால் அஹங்கார மமகாரங்களுக்கு ஆளாகிறோம் ;

நம: – நம்மை நாமும் காத்துக்கொள்ள முடியாது. பிறரும் காக்க முடியாது. எம்பெருமானே காக்கும் இயல்வினன். அவனே உண்மை உபாயம் ஆவான். இந்த எண்ணம் உண்டாகாததால் நம்பிக்கை பிறப்பதில்லை.

ம: – ‘எனக்கு நான்’ என்னும் விரோதியைக் குறித்து முழுமையாகத் தெரிந்து கொள்ளாததால் பயம் பிறப்பது இல்லை.

நாராயணாய என்பதின் பொருளான – எம்பெருமானுக்குப் புரியும் தொண்டு ஒன்றே உண்மை ஆநந்தத்தை விளைக்குமென்பதை உள்ளபடி அறியாததால் தொண்டுபுரிவதில் விருப்பம் ஏற்படுவதில்லை.

விரோதியைக் கண்டு பயம் உண்டாகி, அதனால் பிரானுக்கே நாம் அடிமை என்னும் உண்மையை உணர்ந்து, அவனே ஸாதனம் என அறிந்து, அவனிடமே புருஷார்த்தமாகிய கைங்கர்யத்தை ப்ரார்த்தித்துப் பெற்று, ஜீவாத்மா பேரின்ப வாழ்வைப் பெறவேண்டும்.

இவ்வாறு, திருமந்திரம் ஈச்வரனுக்கும் ஆத்மாவிற்கும் உண்டான சம்பந்தத்தையும்; அந்த சம்பந்தத்திற்கு ஏற்றதான உபாயத்தையும்: இவ்விரண்டிற்கும் பொருத்தமான அவனுக்கே தொண்டுபுரியவேண்டும் என்ற ப்ரார்த்தனையையும் சொல்லி முடிக்கிறது.

**3.** பரந்தபடி: ச்ரிய:பதிப்படியில் கூறியது போலவே அகார உகார மகார பதங்களையும், மறைந்து கெட்ட நான்காம் வேற்றுமையையும், நம: பதம், நாராயண, ஆய பதங்களை விவரிக்கிறார்.

திருமந்திரத்தாலே ஈச்வரனுக்கும் ஜீவாத்மாவிற்கும் உண்டான ஸம்பந்தத்தையும், அந்தத் தொடர்பிற்கேற்ப பகவானையே வழியாகப் பற்றுதலையும், அவ்வாறு பற்றியதின் காரணமாய் ஏற்படும் கைங்கர்ய ப்ரார்த்தனையயும் சொல்லி இறுதிப்படுத்துகிறது.

ச்ரிய:பதிப்படியில் காட்டாத பாசுரமான ‘மூன்றெழுத்து’ என்கிற பாட்டை ப்ரணவத்திற்கு அர்த்தமாக அநுஸந்திக்கும்படி அருளுகிறார்.

‘மூன்றெழுத்து’ – அகார, உகார, மகார ஸ்வரூபமான ‘ஓம்’ என்னும் ப்ரணவம் மூன்று எழுத்துக்களாகவும், மூன்று பதங்களாகவும் மூன்று அர்த்தங்களைக் கூறுகிறது. எம்பெருமான் இருக்கும் விதம் இங்கு விவரிக்கப்படுகிறது.

ப்ரணவம் நம: பதத்தோடும் நாராயண பதத்தோடும் சேர்ந்து மூன்று பதங்களாகி ஆத்மாவினுடைய அநந்யார்ஹ சேஷத்துவம், அநந்ய சரணத்துவம், அநந்ய போக்யத்வமாகிற மூன்று நிலைகளையும் கூறுகின்றது. அதற்கு எதிர்த்தலையாக பெருமானுடைய சேஷித்வம், சரண்யத்வம், ப்ராப்யத்வம் என்கிற மூன்று நிலைகளையும்

தெளிவாக்குகின்றது.

'அகாரார்த்தாயைவ' என்கிற ச்லோகத்தை பதத்ரயத்துக்கும் அர்த்தமாக அநுஸந்திக்கும்படி அருளுகிறார்.

மகாரத்தின் பொருளான ஜீவாத்மா, அகாரப்பொருளாய் ஸர்வ ரக்ஷகனான நாராயணனுக்கே அடிமை. ஜீவாத்மாவின் ஸ்வரூபம் 'நான் எனக்கு உரியேனல்லேன்' என்பதாகும். அழியாத நித்ய வஸ்துக்களின் திரள்களுக்கு ஆதாரமானவன் என்றும், அழியாத நித்ய வஸ்துக்களின் திரள்களைத் தனக்கு உறைவிடமாக உடையவன் என்றும், எந்த நாராயணனைச் சொல்லுகிறதோ, அந்த எம்பெருமானுக்கே, எல்லாக் காலங்களிலும் எல்லாநிலைகளிலும் என்னுடைய இயற்கையான கைங்கர்யங்கள் விளைய வேண்டும் என்கிற ப்ரார்த்தனையைச் செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறது.

'எம்பெருமானுக்கே அடிமையாயிருப்பவன் யான். அத்தகைய யான், எனக்குரியனாய் இருத்தல் கூடாது. எல்லாப் பொருள்களுக்கும் சேஷியான நாராயணன் முகமலர்த்திக்கு உறுப்பாய் எல்லா அடிமைகளும் செய்யப் பெறுவேனாக வேண்டும்', என்பது இம்மந்திரத்தின் ஸாரப்பொருள்.

'ஆக, திருமந்திரத்தால், எம்பெருமானுக்கே உரியேனான நான், எனக்குரியனன்றிக்கே ஒழிய வேணும். ஸர்வ சேஷியான நாராயணனுக்கே எல்லாவடிமைகளும் செய்யப் பெறுவேனாக வேணுமென்றதாய்த்து' என்பது முமுக்ஷுப்படியில் திருமந்திரப்ரகரணத்தின் இறுதி சூத்திரம்.

இவ்விரு சொற்றொடர்களால், இத் திருமந்திரத்தைச் சுருக்கி அருளிச் செய்ததற்குக் காரணம் பரந்த அறிவுடையோரும், அஃதற்றவரும் இதன் பொருளை நன்கு உணர்ந்து நாடோறும் அனுசந்திக்க வேண்டும் என்னும் கருத்தைக் கொண்டதே ஆகும். ஆதலால், யாவரும் எப்போதும் இம்மந்திரத்தின் அர்த்தத்தை இன்றியமையாது அனுசந்திக்கக் கடமைப்பட்டுள்ளனர் என்பது வலியுறுத்தப்பட்டது.

திருமந்திரப்ரகரணம் முற்றிற்று.

**கீதாசார்யன்** பத்திரிகைக்கு சந்தா செலுத்துபவர்கள் பின்கண்ட வங்கியின் (எந்த ஊரிலும்) எந்தக் கிளையிலும் கீதாசார்யன் சந்தா செலுத்தலாம்: **Account in the Name of GEETHACHARYAN TRUST, Punjab National Bank A/c No. 0346000100121239 IFSC: PUNB0034600.** இங்குள்ள **QR Code** மூலமாகவும் சந்தா செலுத்தலாம். சந்தா செலுத்திய விவரத்தை, கீதாசார்யன் அலுவலகத்திற்குத் தொலைபேசி மூலமாகவோ, SMS, Whatsup, கடிதம், geethacharyan@yahoo.com க்கு E-mail மூலமாகவோ தெரிவிக்க வேண்டும். தொலைபேசி மற்றும் Whatsup எண் : **9444911292** (Messages only) மணியார்டர்/டி.டி./ உள்ளூர் காசோலைகள் மூலமும் சந்தா செலுத்தலாம்.

இரண்டு வருடச் சந்தா ரூ. 500/-    பத்து வருடச் சந்தா ரூ. 2500/-

அருளிச்செயல் அமுதம் – 15

# இரண்டாம் திருவந்தாதி

## ஸ்ரீ உ.வே. பெருமாள்கோவில் ப்ரதிவாதி பயங்கரம் ராஜஹம்ஸம் ஸ்வாமி

திருமகள் கேள்வனாலே மயர்வற மதிநலமருளப் பெற்றவர்கள் ஆழ்வார்கள். எம்பெருமானுடைய குணங்கள், திருமேனி, அழகு முதலியவற்றை ஆழ்ந்து அனுபவித்து அவ்வனுபவத்தையே செவிக்கினிய செஞ்சொற்களாக வெளியிட்டருளினர் ஆழ்வார்கள். அவர்கள் பதின்மர். முந்துற முன்னம் அவதரித்தவர் முதலாழ்வார்கள். இக்காரணம் கொண்டே ஸ்ரீ மணவாளமாமுனிகள் உபதேசரத்தினமாலையில் “மற்றுள்ள ஆழ்வார்களுக்கு முன்னே வந்துதித்த” எனப் புகழ்கின்றார். அம் மூவருள் நடுநாயகமானவரான பூதத்தாழ்வார் அருளிச் செய்ததும், நாலாயிர திவ்யப் ப்ரபந்தத்தில் மூன்றாவது ஆயிரமாகிற இயற்பாவில் இரண்டாவதாக ஸ்ரீமந்நாதமுனிகளால் வகுக்கப்பட்ட இரண்டாம் திருவந்தாதியின் ஸாரத்தை மேலே அனுபவிப்போமாக.

பகவானை எப்போதும் அனுபவிப்பதற்கு மிகவும் முக்யமானது மூன்று. அவையாவன பரபக்தி, பரஜ்ஞானம், பரம பக்திகள். இம் மூன்றினுள் எம்பெருமானை அனுபவிக்க வேணுமென்ற ஆசையே பரபக்தி. நன்றாக அனுபவித்தல் பரஜ்ஞானம். இது மேலும் மேலும் பெருகி தடைபடாமல் அனுபவிக்க ஆசைப்படுவதே பரமபக்தி. இதையே ‘தர்சனம் பரபக்தி ஸ்யாத் பரஜ்ஞானம் து ஸங்கம: புனர்விச்லேஷ பீருத்வம் பரமாபக்திருச்யதே’ என்ற ச்லோகமும் வலியுறுத்துகிறது. நம் முன்னோர்கள் மற்றொரு விதமாகவும் தெரிவிக்கின்றனர். அதாவது எம்பெருமானோடு கூடுவது ஸுகம். பிரிவது துக்கம் என இருப்பது பரபக்தி. அவனை நன்றாக அனுபவித்தல் பரஜ்ஞானம். அவ்வாறு அனுபவம் கிடைக்காவிட்டால் நீரைவிட்டுப் பிரிந்த மீன்போலே மூச்சு அடங்கும் படியிருக்கை பரமபக்தி. இப்படிப்பட்ட பரபக்தி, பரஜ்ஞான, பரமபக்தி முதலான மூன்றும் முதலாழ்வார்கள் மூவருக்கும் தனித்தனியாக இருந்தாலும் ஒவ்வொரு ஆழ்வாருக்கும் ஒன்று தலையெடுத்து மற்றவையிரண்டும் அதற்குள்ளே அடங்கியிருக்கும். பொய்கையாழ்வார்க்கு பரபக்தி மிகுந்திருக்க பரஜ்ஞான, பரமபக்திகள் உள்ளடங்கியிருக்கும். பூதத்தாழ்வார்க்கு பரபக்தி நன்கு முற்றி பக்குவமாய் பரஜ்ஞானமாகி மேலே பரபக்தியும் பரமபக்தியும் உள்ளடங்கியிருக்கும். பேயாழ்வார்க்குப் பரமபக்தியே அதிகமாகி மற்றவையிரண்டும் அதற்குள்ளேயே மறைந்து கிடக்கிறது. இவ்வாறு ஒன்று வெளிப்பட்டும் மற்றவையிரண்டும் அதனுள் மறைந்திருப்பது ஈச்வரவனுடைய ஸங்கல்பத்தினாலேயே ஆகும். மேலும் இவை முக்தி தசையிலே உண்டாகக் கூடியதாக இருந்தாலும் ஆழ்வார்களுக்கு மட்டும் லீலாவிபூதியிலேயே விளைந்ததற்குக் காரணம் அவனதின்னருளே.

பொய்கையாழ்வார் முதல் திருவந்தாதியில் நித்யவிபூதி, லீலா விபூதி இரண்டிற்கும் தலைவன் எம்பெருமான் என்பதை வெளியிட்டருளினார். இவ்விஷயத்தை பூதத்தாழ்வார்க்கு உணர்த்துவதற்காக ஜ்ஞானமானது பக்தியெனும் நிலையை அடைந்தது. அந்த பக்தியும் ‘நிரம்பின ஏரி நெளிக்குமாபோலே” என்பது போல் நிறைந்த காரணத்தினால் வழிந்து புறப்பட்ட பாசுரங்களே இரண்டாம் திருவந்தாதியாகும். அப்படியானால் பொய்கையாழ்வார்க்கு பக்தி என்பதே

கிடையாதா? என சந்தேகம் பிறக்கும். இவ்வாறில்லை. பொய்கையாழ்வார்க்கும் பக்தி உண்டு. நூலானது தறியில் ஏற்றி நெசவு செய்து முடிந்த பிறகு துணி என்ற பெயருடன் திகழ்வது போலே பொய்கையாழ்வாருடைய அறிவானது திருக்கோவலூர் இடைகழியிலே நெருக்குண்ட போது உராய்ந்ததனால் பூதத்தாழ்வாருக்கும் ஏற்பட்டது. அவ்வறிவின் முதிர்ச்சியான பக்தி பாசுரங்களாக வெளிப்பட்டது.

அறிவு முதிர்ந்து பக்தியானது என்றால் இரண்டு அந்தாதிகளும் ஒருவரே செய்திருக்க வேண்டாமா? வேறு வேறு ஆழ்வார்கள் அருளியதாகக் காணப்படுகிறதே? என்னில் மும்முனிகள் தனித்தனியே எழுதியிருந்தாலும் ஒரே விஷயத்தைத் தெரிவிக்கின்ற காரணத்தினால் இலக்கணங்களை விளக்கும் வ்யாகரண சாத்திரம் ஒன்றாகவே கொள்ளப்படுகிறது. அது போலவே ஜைமினி பன்னிரண்டு அத்யாயங்களும் வ்யாஸர் நான்கு அத்யாயங்களுக்கு எழுதியிருப்பினும் விஷயத்தின் ஒன்று பட்ட தன்மையினாலேயே ஒரே சாத்திரமாகக் கொள்ளப்படுகிறது. இவ்விரண்டு காரணங்களைப் போலவே இவ்விடத்திலும் கொள்ள வேண்டும்.

பகவான் அளவற்ற ஜ்ஞானமும், சக்தியும் உடையவன். உலகைப் படைத்தவன். சங்கு சக்கரங்களை தரித்தவன் என முதற்றிருவந்தாதியில் கூறியுள்ளது பக்தியினுடைய கார்யமே ஆகும். இதற்கு முன் பொய்கையாழ்வாராகிற தனக்கு இல்லாத அறிவை நெருக்கி இப்போது உண்டாக்கினபடியால் பாசுரங்களாக வெளிப்பட்டது. எவ்வாறென்றால் 'பழுதே பலபகலும் போயினவென்று' தாமே கூறிக் கொள்கிறார். நாமெல்லாராலும் அடையத் தகுந்தவன் எம்பெருமானே. அவ்வாறு அடைவதற்குத் தேவையான பக்தியை உண்டாக்குமவனும் அவனே. இவ்வுலகையெல்லாம் நிர்வஹிப்பது எவ்வளவு கடினம். எப்படிச் செய்கிறான் என்பதை நினைத்தாலே வியப்பூட்டுகிறது. அதுபோல் என் மனத்தைச் சரி செய்து நல்வழியில் திருப்பி விட்டதை நினைத்து வியப்பூட்டுகிறார் முதல் திருவந்தாதியில். ஆழ்வார்கள் அனைவருக்கும் ஜ்ஞானம், பக்தி முதலான எல்லாம் உண்டு. ஆனாலும் பொய்கையார் ஜ்ஞானத்தை முக்யமாகவும் பூதத்தார் பக்தியை முக்யமாகவும் கொண்டுள்ளனர். இவ்வாழ்வார்கள் அனைவரும் ஒருவர் மற்றவருடைய உள்ளத்தை அறிந்து கொண்டவர்கள். இக்காரணம் கொண்டே 'பேசிறே பேசும் ஏககண்டர்கள்' என்று கொண்டாடப்படுகிறது. ஆதிசேஷனுக்கு பல தலைகள் இருந்தாலும் கருத்து ஒன்றேயானாப் போலே இவர்கள் பதின்மராக இருந்தாலும் பேச்சு ஒரே விஷயமான எம்பெருமானைப் பற்றி தான்.

இப்படி பக்தியினால் பேசின பூதத்தாழ்வாரை கொண்டாடுகிறார் தனியன் மூலமாகத் திருக்குருகைப்பிரான் பிள்ளான். பூதத்தாழ்வாரை வணங்கினால் அடியவர்களுடைய பிறப்பது இறப்பதாகிற ஸம்ஸாரம் தொலைந்து மோக்ஷத்தை அடையும் பேறு நமக்கு கண்டிப்பாக கிடைக்கும். ஆகவே பூதத்தாரை வணங்குகின்றேன். அவர் அளித்த அந்தாதிப் பாசுரங்கள் எவ்வாறு இருக்கும்? என ஸம்ஸாரிகள் கேட்க அதற்கு விடையளிக்கிறார். "தொண்டர்கமுதுண்ணச் சொல்மாலைகள் சொன்னேன்" என்பது போலே அடியவர்களுக்கு அம்ருதமயமாக உள்ளது. இவ்வாழ்வாரே 85ம் பாசுரத்தில் 'அமுதன்ன சொன்மாலை ஏத்தித் தொழுதேன்" என உரைக்கின்றார். இதன்பின் அவர் அவதரித்த ஊரின் பெருமை பேசப்படுகிறது. நல்ல புகழை உடைய இடம், முத்துக்கள் சேருமிடம் என்பது கடன் மல்லைக்கு விசேஷணங்கள். கடன்மல்லைக்கு நன்புகழாவது தலசயனத்துறைவாரையும் பூதத்தாரையும்

தன்னிடத்தே கொண்டிருப்பதே. முத்துக்கள் என்கிற பன்மைக்குச் சேர ஸ்வரஸ்யமான பொருள்களைக் கூறலாம். 1. கடலில் தோன்றும் முத்துற 'வானவரால் வணங்கப்படும் முத்து' என்னப்பட்ட தலைசயனப் பெருமாளாகிற முத்து. 2. இவ்விபூதியிலிருந்துக் கொண்டே முக்தர் என்னும்படியாக கரைகடந்த முத்தான பூதத்தாழ்வாராகிற முத்து என மூன்று வகை முத்துக்கள் சேருங் கடல்மல்லை என்கிறது காஞ்சீ ஸ்வாமியின் தீபிகையுரை. பூதத்தார் என்பது வடமொழியில் பூ ஸத்தாயாம் என்கிற தாதுவடியாகப் பிறந்தது பூதம் என்னும் சொல். ஸத்தை பெற்றது என்று பொருள். எம்பெருமானுடைய திருக்குணங்களை அனுபவித்தே ஸத்தைப் பெற்றாரென்னும் காரணத்தினால் பூதத்தாழ்வார் என்கிற திருநாமம் ஆயிற்று. இனி பாசுரங்களின் சுவையை அனுபவிப்போம்.

முதற் பாசுரத்தில், பூதத்தார் எம்பெருமானிடத்தில் உண்டான அன்பினால் உண்டான தம்முடைய அடிமைத் தன்மையையும் பகவானின் தலைமைத் தன்மையையும் அனுமானத்தால் நிலை நாட்டுகிறார். கீழே உலகம் முழுவதையும் பக்தியாலே நினைத்து பக்தியையே அகலாகக் கொண்டு விளக்கேற்றினார். விளக்கெரிவதற்கு நெய்யாக ஈஸ்வரனை அனுபவித்தாலல்லது தரிக்க முடியாக ஆர்வமே மாறிற்று. இது அன்பின் இரண்டாம் நிலை. எம்பெருமானிடம் பரிவுடனிருத்தல் அன்பு. அவனை விட்டு நீங்க முடியாத தன்மை ஆர்வம். இனிமையான எம்பெருமானை அனுபவிப்பதனால் சிதையும் மனமே விளக்கிற்கு இட்ட தீயாகிறது. எல்லாவித மங்கள குணங்களுக்கும் இருப்பிடமான எம்பெருமானை நினைத்து உருகும் மனோரதமே திரியாக ஆயிற்று. உருகும் நிலையிலே மனம் இருப்பதனால் அது அறிவையே ஸாரமாகக் கொண்ட ஆத்மாவைக் குறிக்கிறது. ஆத்மா ஜ்ஞான ஆனந்தங்களை உடையது. பகவானுக்கே அடிமைப்பட்ட நல்ல வஸ்து. ஆத்மாவானது வெட்டவோ, எரிக்கவோ, நனைக்கவோ முடியாதது என்கிற கீதாசார்யன் வார்த்தைக்கு ஏற்ப பகவத் விஷயத்தில் உருகி த்ரவபதார்த்தம் போல் ஆய்விட்டது. எம்பெருமானிடம் ஈடுபாடு மூழ்கின தன்மையையே உருகியது என்றதனால் சொல்லப்பட்டுள்ளது. ப்ரஹ்லாதன் ஈச்வரனையே மனதில் நினைத்துக் கொண்டிருந்த காரணத்தினால் பாம்பு கடித்ததையும் அறியவில்லை என்பதை விஷ்ணு புராணத்தில் கூறப்பட்டுள்ளதே. அது போலவே ஆழ்வார்க்கும் பக்தியில் ஏற்பட்ட மாற்றங்களைச் சொல்லி அதன் மூலமே விளக்கேற்றினார். விளக்கானது தன்னையும் காட்டி மற்றவற்றையும் காட்டும்படி இருக்கும். அது போலவே பக்தியாகிற விளக்கினால் உண்டான முதிர்ந்த அறிவினால் தலைவன் அவன். அவனுக்கு அடிமையுடனிருப்பதே நமக்குத் தகுந்தது. அதற்காக நாம் செய்ய வேண்டியது கைங்கர்யமே. ஆகையால் நாராயணர்க்கு இவ்வழியில் கைங்கர்யம் செய்தேன். அடியேனுக்கு உண்டான பக்தியின் வெள்ளம் பின்புள்ளார் அனைவரும் அனுபவிக்கும்படி பாசுரமாகச் செய்துள்ளேன். என்னை ஈக்வரன் நோக்கின விதத்தில் இப்பாசுரங்கள் கற்பவர்களுக்கும் பகவானில் நோக்குதல் ஏற்படும். எல்லாப் பாசுரங்களுக்கும் முடிவில் பலம். ஆனால் இங்கோ தொடங்கும் போதே பலத்தைச் சொல்லுவது சிறப்பானது என முடிக்கிறார் முதற்பாசுரத்தினாலே.

எம்பெருமானின் திருநாமங்களை பக்தியுடன் கிரமம் எதுவும் இல்லாமல் எவ்வாறு சொல்லினும் நித்ய ஸம்ஸாரிகளையும் நித்ய ஸூரிகளுக்கு ஸமமாக ஆக்குவன் என்கிறார் இரண்டாம் பாசுரத்தில். இவ்வுலகத்து ஸம்ஸாரிகள் தம்மூரில் கிடைக்கும் பூக்களைக் கொண்டு திருவடியைப் பணிந்தவர்கள். ஸ்ரீவைகுண்டத்தை அடைவது ஆச்சர்யமானது எனப் பேசுகிறார்

3ம் பாசுரத்தில். 4 ஆம் பாட்டில் தம்முடைய மமகாரம் தொலைந்து எம்பெருமானின் எளிமைத் தன்மையை நினைத்து உருகுகின்றார். அவ்வெளிமைத் தன்மையின் நிலை இவ்வாறானது என்று சொல்ல முடியாததை விளக்குகிறார் 5ம் பாசுரத்தில். அவ்வெண்மைத் தன்மை நம்போல்வார் பலிக்காமல் இழந்தே போகவேண்டுமா? எனில் இல்லை. மற்றைய ஆசைகளை ஒழித்து திருநாமத்தைச் சொல்லுபவர்கள் திருவடி சம்பந்தத்தை பெற்றே தீருவர்கள் என்கிறார் 6ம் பாட்டில். அவ்வாறு சம்பந்தம் பெற்றவர்களோடு நீயும் சேர்ந்து பற்றினால் நமுசி எம்பெருமான் கையில் கழன்றது போல் நம்முடைய பாபங்களும் கழன்று ஓடி விடும் என்பதை விளக்குகிறார் 7ம் பாசுரத்தில். எம்பெருமானைப் பற்றும் போது முன்விரோதங்கள் தொடராதபடி பற்ற வேணும். பொய்யாகப் பற்றாமல் உண்மையாகப் பற்ற வேணும். அவ்வாறு பற்றுமவனக்கு ஏற்படும் தடைகளையும் பூதனையை முடித்தது போல் தகர்த்தெரிந்து காப்பவள் என்பதைப் பேசுகின்றார் 8ம் பாசுரத்தில். 9ம் பாட்டில் எதற்கு பூதனையை நினைக்கிறீர்கள்? தேவையானால் எப்பொழுதும் எம்பெருமானிடதத்தில் அன்புடையவளான யசோதையைப் பற்றித் தெரிவியுங்கள். யசோதையின் அன்பு யாருக்காவது உண்டா? பூதனையை நினைத்த வருத்தம் தீர யசோதையைக் கொண்டாடி 'அவளும் ஒருத்தியே' எனக் கொண்டாடுகிறார். இப்பாசுரத்தை அடியொற்றியே ஆண்டாள் திருப்பாவையில் 25ம் பாசுரத்தில் 'ஒருத்தி மகனாய்' என்று அருளிச் செய்தாளோ? ஏன நினைக்கத் தோன்றுகிறது. யசோதையைப் போல் அன்பு இல்லாவிடினும் ஓரளவாவது அன்பு உண்டாயிற்று. இது என்றென்றும் தொடரவேணும். கழிந்த காலங்களில் இதர தேவதைகளின் கால்களில் விழுந்துப் பட்ட துன்பம் எப்போதும் ஏற்படக் கூடாது அவர்களை அவ்வாபத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என வேண்டுகிறார். 10, 11, 12, 14 பாசுரங்களில். இந்த 11ம் பாசுரத்தை நோக்கும் போது 'யான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்' என்கிற பழமொழி இப்பாசுரனாலேயே ஏற்பட்டதோ என நினைக்கத் தோன்றுகிறது. அவனைப் பற்ற இன்னார் இனையார் என்பது கிடையாது. கஜேந்த்ரனை காத்தது போல் நம்மையும் காப்பான். எல்லோரும் பற்றுங்கோள் என அறை கூவல் விடுகிறார் 12ம் பாசுரத்தில். லோகத்தார் உடலுக்குப் பூண் கட்டிக் கொள்கின்றனர். ஆனால் நமக்காக வாமன, ராம, க்ருஷ்ணாவதாரங்களில் பட்ட துன்பங்களை நினைத்துப் பாருங்கள். அவனே படும போது நாம் சிரமப்படக் கூடாதா? என சுகவாசிகளை வெறுத்துப் பேசுகிறார் 15ம் பாட்டில். இவ்வாறு பல பாசுரங்களைத் தெரிவித்த பூதத்தார் 56ம் பாசுரத்தில் ஒரு சிறப்பையும் காட்டுகிறார்.

அதாவது மற்றைய ஆழ்வார்கள் பிராட்டியை விளிக்கும் போது எம்பெருமானுக்கு விசேஷணமாகவே காட்டுகின்றனர். ஆனால் இவரோ 'பேணிக் கருமாலைப் பொன்மேனி காட்டா முன் காட்டும்' என்கிறார். கரிய நிறத்தவனான திருமால் திருமேனியழகை காட்டுவதற்கு முன்பே லோகமாதாவான பிராட்டி எம்பெருமானை நமக்கு காட்டிக் கொடுப்பாள் எனக் கூறுவது சிறப்பானது 74ம் பாசுரத்தில். தன்னை "பெருந்தமிழன் நல்லேன் பெரிது" எனமார்த் தட்டிக் கொள்கிறார். இவ்வாறு நான் என அஹங்காரப்படுவது தவறில்லையோ எனில்? தவறில்லை. இது ஸாத்விக அஹங்காரம் எனப்படும். தம்முடைய பெருமையைச் சொல்லிக் கொள்ளலாம் என்பதை 'மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கினும்" என்கிற நன்னூல் சூத்திரமும் பகர்கிறது. இப்பாசுத்தைப் பின்பற்றியே 'என்மதிக்கு விண்ணெல்லாம் உண்டோ விலை?' 'கவி சொல்ல வல்லேற்கு இனிமாறுண்டோ' 'இல்லை எனக்கெதிர் இல்லை எனக்கெதிர்' என்பவை தோன்றின போலும்.

பெருந்தமிழனான நீர் ஒரு கவி சொல்லும் என்று எம்பெருமான் கேட்க, அதுவே இப்பாசுரமாக (75) உருவெடுத்துள்ளது. பெருகும் மதநீரை உடைய யானையானது பெண் யானைக்கு இரண்டு கணுக்களை உடைய இன மூங்கிலைத் தேனில் தோய்த்து நீட்டும் திருவேங்கடமலை எனக் கொண்டாடுகிறார். இப்பாசுரத்திற்கு திருமலை அனந்தாழ்வான் நிர்வாஹமாக காஞ்சீ ஸ்வாமி காட்டும் விளக்கமானது சுவையானது. யதிராஜரைப் புகழும் அமுதனார் 'எங்கள் இராமாநுச முனிவேழம்' எனக் கொண்டாடுகிறார். யானையான இராமாநுசர் திருவேங்கட யாத்திரையாக விடை கொண்டபோது சிஷ்யர்கள் அனைவரும் "நம்மாழ்வாரின் சரணாகதி பலித்தது திருமலையிலேயே. அவனுக்கு இரண்டு பிரிவுகள் உடைய த்வயார்த்தத்தை அளித்துள்ளார். அந்த த்வயார்த்தத்தை எங்களுக்கு அருளவேணும்" என வேண்ட அருளினார். அது எவ்வாறு இருந்தது என்பதை காட்டுகிறார். மத்தகஜத்தை போல் த்வயார்த்த விஷயங்களை உடைய எம்பெருமானார் இரண்டு கணுக்களைப் போலிருக்கும். இரண்டு பிரிவுகளை உடைய த்வயார்த்ததை பக்கத்திலிருக்கும் தேனான திருமந்திரத்தையும் சரம ச்லோகத்தையும் கலந்து உபதேசித்தார் என்பதை பெரியோர்கள் வாயிலாகத் தாம் கேட்டதாகக் காட்டியுள்ளார்.

இவ்வாறு பெருமையுடைய எம்பெருமான் ஸந்நிதிக்கு நாம் போகும் போது செல்ல வேண்டிய விதத்தைப் பேசுகிறார் வரைச் சந்தனக் குழம்பும் என்கிற 76ம் பாசுரத்தினாலே. 95ம் பாசுரமான என்னெஞ்சமேயாள் என்கிற பாசுரத்தில் லோகத்திற்கு காரணன், அனைவரையும் காப்பவன். திருவத்தியூராகிற காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருந்து என்னுடைய எல்லா அவயங்களிலும் புகுந்து நிற்கின்றான். அவ்வாறானவன் வார்த்தையே 'ஜ்ஞாநீ து ஆத்மைவமேமதம்'' என்பது. இதனால் எம்பெருமான் அடியவர்களைத் தவிர மற்றவர்களை அறியாத தன்மை வெளிப்படுகிறது. 'என்னெஞ்சமேயான்' என்கிற பதத்திற்குச் சேர தேவப் பெருமாள் ஸந்நிதியில் எழுந்தருளியுள்ள பூதத்தார் மூலவர் தன்னுடைய ஹ்ருதத்தில் கைகளை வைத்துக் கொண்டு "தொழுதெழன் மனனே" என்கிற நம்மாழ்வார் எழுந்தருளியுள்ளது போலுள்ளது குறிக்கொள்ளத்தக்கது. அத்தேவப் பெருமாளின் பெருமை (96) சில. அவையாவன பெரிய திருவடியை வாஹனமாக உடைய தன்மை. ஆதிசேஷன் மீது கண்வளர்ந்தருளும் நிலை. இத்தோடு கூடிய தேவப் பெருமாளையே வேதங்கள் எல்லாம் பூஜிக்கத் தகுந்தவன் எனக் கொண்டாடுகிறது. அவனைவிட மேலானவர்கள் யாரும் இல்லை. அவனைக் காண வைகுந்தம் செல்ல வேண்டாம். நமக்காகவே கச்சியில் கோயில் கொண்டுள்ளான். அவனை அனுபவியுங்கள் என வேண்டுகிறார். இவ்வாறான எம்பெருமான் என்னோடு கலந்து பழகினது செயற்கரிய செயல் எனக் கொண்டாட தகுந்தது. இதற்குக் காரணம் ஆழ்வாரை விட்டு எம்பெருமான் இருக்க முடியாத நிலை. இதையே வேதமும் 'ப்ரஜாபதிஸ்த்வோவேத....... ஸ புண்யோ பவதி'' என்றும், 'வாரிக் கொண்டு....... முற்றப் பருகினான்' என்கிற திருவாய்மொழிப் பாசுரமும், 'அவனை இவன் பற்றும்...... ஸ்வீகாரமே ரக்ஷகம்'' என்கிற பிள்ளையுலாகாசிரியரின் வார்த்தையும் உறுதிப்படுத்துகிறது. இப்பெருமையுடைய ஈச்வரன் பூதத்தாரிடத்தில் உமக்குத் தேவையானது என்ன? என்று கேட்க, உன்னிடம் அடியேன் வைத்துள்ள அன்பைத் தாங்குமளவு சுருக்கித் தரவேணும் எனக் கூறி அந்தாதியை முடித்தருளுகிறார். இக்கட்டுரையின் கண் உள்ள குற்றங்களை நற்றமாகக் கொள்ளவேண்டும்.

நினைவில் நிற்பவர்கள் – 15

# ஸ்ரீமதி ருக்மிணி அம்மா

*முதுமுனைவர் ம.அ. வேங்கடக்ருஷ்ணன்*

அடியேனுடைய தந்தையார் ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தி ஐயங்கார் திடீரென்று ஒருநாள் ஆசார்யன் திருவடி அடைந்த பொழுது அடியேனுடைய தாயாருக்கு வயது 35. அவருடைய குழந்தைகளான நாங்கள் ஐவரும் சிறுவர்கள். அவருடைய முதல் பிள்ளையான என் தமையன்



ஸ்ரீனிவாசனுக்கு வயது 15. என் கடைசித் தம்பி பார்த்தசாரதிக்கு அப்போது வயது இரண்டுதான். மிகவும் ஆசாரமான வைணவக் குடும்பத்தைச் சேர்ந்தவர் ஆதலால் வெளி உலக அனுபவமும் அதிகம் இல்லாதவர் எனது தாயார். எல்லாவற்றிற்கும் கணவரையே எதிர்பார்த்திருந்தவர். அப்படிப்பட்டவருக்கு திடீரென்று ஏற்பட்ட கணவருடைய இழப்பு என்பது பேரதிர்ச்சியைத் தந்தது. வீட்டிற்கு வெளியில் கூடச் செல்லமுடியாத கட்டுப்பாடுகள் இருந்த காலத்திலும், எல்லாக் கஷ்டங்களையும் தாங்கிக் கொண்டு மிகவும் சிரமப்பட்டு குழந்தைகள் ஐவரையும் வளர்த்து ஆளாக்கி ஒவ்வொருவரையும் ஒவ்வொரு துறையில் செயல்படச் செய்தார். ஓரளவு வசதி படைத்த குடும்பம் என்றாலும்கூட எங்களை வளர்ப்பதற்காகப் பல தியாகங்களைச் செய்த அவர் மிக மிக எளிமையான வாழ்க்கையே வாழ்ந்தார். எனக்குத் தெரிந்து அவர் பட்டுப்புடவை உடுத்தி ஒருநாள்கூட பார்த்ததில்லை. மிகவும் விலை குறைந்த நூல் புடவை மட்டுமே உடுத்துவார். எந்த வித நகைகளையும் அவர் அணிந்ததில்லை. எதிலுமே ஆசை அற்றவராக இருந்ததைப் பலர் வியந்து கூறியிருக்கிறார்கள்.

தம்முடைய கவனத்தையும் வேறு விஷயங்களில் சிதறவிடக் கூடாது என்பதனால், ஆன்மிக விஷயங்களிலேயே ஈடுபாடு கொள்ளத் தொடங்கினார். அக்காலத்தில் என் தந்தையின் அத்தை ஸ்ரீமதி ஆண்டாளம்மாள் என்பவர் ஆன்மிக விஷயங்களில் மிக உயர்ந்த ஞானம் படைத்தவராகத் திகழ்ந்தார். மிகப் பெரிய அறிஞர்களும் திருவல்லிக்கேணிக்கு வந்தால் அவரைச் சந்திக்காமல் செல்லமாட்டார்கள். அவர் தமது வயது முதிர்ந்த காலத்திலும் பல பெண்களுக்கு ஆழ்வார்கள் பாசுரங்கள் சுலோகங்கள் முதலியவற்றைக் கற்பித்து வந்தார். அவரிடம் என் தாயார் ஆழ்வார்கள் அருளிய நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பாசுரங்கள் அனைத்தையும் கற்றார். ஆன்மிக விஷயமாக நடைபெறும் சொற்பொழிவுகளைக் கேட்பதையே தமது பொழுதுபோக்காகக் கொண்டார். ஸ்ரீ உ.வே. வேளுக்குடி வரதாசாரியர் சுவாமி எங்கு உபந்யாஸம் செய்தாலும் அங்கு சென்று கேட்டு வருவார். மற்றும் பல அறிஞர்களின் உபந்யாஸங்களையும் விடாமல் கேட்டு வருவார். ஸ்ரீ வேளுக்குடி ஸ்வாமி, ஸ்ரீ சதாபிஷேகம் ஸ்வாமி ஆகியோர் ஸாதித்த பகவத் விஷய காலக்ஷேபத்தைத் தொடர்ந்து பல ஆண்டுகள் ஒருநாள் கூட விடாமல் கேட்டு வந்தார். வீட்டில் எங்களுக்குச் செய்ய வேண்டிய நேரம் தவிர பெரும்பாலும் ஸ்ரீபார்த்தசாரதி கோயிலில்

நடைபெறும் உற்சவங்களை ஸேவிப்பதிலேயே பொழுதைக் கழிப்பார். தம்முடைய தோழியான ஸ்ரீமதி சீதா மாமியுடன் சேர்ந்து தினந்தோறும் ஆழ்வார்கள் பாடல்களில் நூறு பாசுரங்களையாவது அநுஸந்தானம் செய்யாமலும், தினந்தோறும் பத்துப் பாசுரங்களுக்காவது வியாக்கியானங்களை ஸேவிக்காமலும் உணவு உட்கொள்ளவே மாட்டார். வயது அதிகமாக அதிகமாக உடலில் தளர்ச்சி ஏற்பட்ட போதும் ஒலிப்பதிவு செய்யப்பட்ட உபந்யாஸங்களைக் கேட்பதிலேயே பொழுதைக் கழித்துவந்தார்.

அடியேன் சில ஆண்டுகளுக்குமுன் பகவத்விஷய காலக்ஷேபம் தொடர் சொற்பொழிவாக ஏறக்குறைய மூன்று ஆண்டுகள் தினந்தோறும் செய்து வந்தேன். அடியேனுடைய இல்லத்திற்கு அருகிலேயே அடியேனுடைய தம்பி ஸ்ரீ நரசிம்மனுடைய இல்லத்தில் தான் அடியேனுடைய தாயார் தங்கி யிருந்தார். அப்போது 80 வயதிற்கு மேல் ஆகிவிட்டபடியால் நான் காலக்ஷேபம் செய்யுமிடத்திற்கு நேரில் வந்து கேட்கமுடியாத நிலை. இதற்காகவே என்னுடைய சொற்பொழியை இணையதளம் (ustream) மூலம் அவரும் கேட்கும்படி ஏற்பாடு செய்தேன். ஒருநாள் கூட விடாமல், தினந்தோறும் கேட்டுவிட்டு நேரில் என்னைப் பார்க்கும்போது மிகவும் மகிழ்ச்சியுடன் அன்று நான் கூறிய விஷயங்களைப் பற்றிப் பேசுவார். "இத்தனை நாள் எதற்காக என்னை உயிரோடு வைத்திருக்கிறான் பகவான் என்று நான் வருத்தப்பட்டதுண்டு. நீ செய்யும் இந்த பகவத்விஷய காலக்ஷேபத்தை நான் கேட்கவேண்டும் என்றுதான் என்னை இவ்வளவு நாள் வைத்திருக்கிறான் போலும். உன்னை நான் வயிற்றில் கொண்டிருந்தபோது சில மாதங்கள் திருநாராயணபுரத்தில் தங்கியிருந்தேன். அப்போது தினந்தோறும் கல்யாணி தீர்த்தத்தில் நீராடிவிட்டு அங்கிருந்த ஞான அச்வத்த மரத்தை ப்ரதக்ஷிணம் செய்து ஞானப்பிரானையும் சேவித்து விட்டு மலைமேல் எழுந்தருளியுள்ள நரசிம்மரையும் சேவித்து விட்டு இல்லத்திற்கு வருவேன். அப்போது அத்தம்பியார் (சகோதரியின் கணவர்) ஸ்ரீ உ.வே. ஆழ்வார் திருமலை ஐயங்கார் ஸ்வாமி பகவத் விஷய காலக்ஷேபம் ஸாதித்துக் கொண்டிருப்பார். அதை முழுவதும் கேட்டுவிட்டுத்தான் உண்ணச் செல்வேன். இப்படி என் வயிற்றிலிருக்கும்போதே பகவத்விஷயகாலக்ஷேபம் கேட்டபடியால்தான் இன்று நீ இப்படி பகவத் விஷய காலக்ஷேபம் செய்யுமளவிற்கு வந்திருக்கிறாய் என்று நினைக்கிறேன். எத்தனையோ வித்வான்களின் காலக்ஷேபங்களை நான் கேட்டிருந்தாலும் என் வயிற்றில் பிறந்த பிள்ளையின் காலக்ஷேபத்தைக் கேட்கும்போது உண்டாகும் ஆனந்தமே தனிதான்" என்று கூறி என்னை உச்சிமுகந்து ஆசீர்வாதம் செய்தார்.

**6–2–2018** அன்று இரவு 11 மணியளவில் படுத்துக் கொண்டிருந்தவருக்கு மூச்சு விடுவது சற்று சிரமமாக இருந்தபடியால் எழுந்து உட்காருகிறேன் என்றார். அவர் எழுந்து உட்காருவதற்கு என்னுடைய மற்றொரு தம்பியான நரசிம்மன் உதவி புரிந்தார். நாற்காலியில் அமர்ந்த பிறகு சற்று மூச்சு விட முடிந்தது. ஆனாலும் உறங்க முடியவில்லை. எனவே மற்றவர்களைப் பார்த்து "நான் நம்மாழ்வாரருடைய திருவாய்மொழிப் பாசுரங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் போய்ப் படுத்துக் கொள்ளுங்கள்' என்று கூறிவிட்டு மிகவும் மெதுவாக "உயர்வற உயர்நலம் உடையவன்" என்று முணுமுணுக்கத் தொடங்கியவர், "துயரறு சுடரடி தொழுதெழு" என்று முணுமுணுத்தபோது மூச்சு நின்று விட்டது. இப்படி அநாயாஸமாக ஒரு மரணம் கிடைக்குமானால் மரணமும்கூட விரும்பத்தக்கதாகி விடுகிறதல்லவா?

ஸ்ரீ:



# திருவயோத்தி ஸ்ரீ ராமஸ்வாமி தேவஸ்தான திருப்பவித்ரோத்ஸவம்

**(அம்மாஜி மந்திர்), கோலாகாட், அயோத்யா**

**Local Office : Sri Saraswathi Bhandaram Committee, 16, Peyalwar Koil Street, Triplicane, Chennai - 5.**

ஸ்ரீராமபிரான் அவதரித்த திவ்யக்ஷேத்ரமான அயோத்யையில் ஸரயு நதிக்கரையில் ஸ்ரீராமபிரானுக்கு அற்புதமான ஒரு திருக்கோயிலை ஸ்ரீமான் உ.வே. யோகிபார்த்தஸாரதி ஐயங்கார் ஸ்வாமி சென்ற நூற்றாண்டில் நிர்மாணித்துள்ளார். அயோத்யையில் இத்திருக்கோயில் தென்னாட்டுப் பாணியில், மூலவர், உத்ஸவர், த்வஜஸ்தம்பம், விமானம் முதலிய வைபவங்களுடன் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலை ஸ்ரீஸரஸ்வதீபண்டாரம் கமிட்டி நிர்வகித்து வருகிறது. இங்கு எழுந்தருளியுள்ள ஸ்ரீராமபிரானுக்கு இவ்வருடம் பவித்ரோத்ஸவம் கீழ்க்கண்டபடி நடைபெறவிருக்கிறது.

## நிகழ்ச்சி நிரல்

**புரட்டாசி 22 (08–10–2025) புதன்கிழமை**
மாலை அங்குரார்ப்பணம், ம்ருத்ஸங்க்ரஹணம், வேத திவ்யப்ரபந்த தொடக்கம்

**புரட்டாசி 23 (09–10–2025) வியாழக்கிழமை**
காலை முதல் கால ஹோமம், ரக்ஷாபந்தனம், பவித்ரம் சாத்துதல்
மாலை இரண்டாம் கால ஹோமம், வேத பாராயணம் திவ்யப்ரபந்த ஸேவை

**புரட்டாசி 24 (10–10–2025) வெள்ளிக்கிழமை**
காலை மூன்றாம் கால ஹோமம், வேத பாராயணம் திவ்யப்ரபந்த ஸேவை.
மாலை நான்காம் கால ஹோமம், வேத பாராயணம் திவ்யப்ரபந்த ஸேவை

**புரட்டாசி 25 (11–10–2025) சனிக்கிழமை**
காலை ஸரயு நதியில் தீர்த்தவாரி, ஐந்தாம் கால ஹோமம்,
மஹா பூர்ணாஹுதி, வேத திவ்யப்ரபந்த சாற்றுமறை

Indian Bank


Name: SRI SARASWATHI BHANDARAM COMMITTEE
Pay Directly to: ammajimandir.ay@indianbk

BHIM UPI

ஆர்வமுள்ள அன்பர்கள் இந்த உத்ஸவத்தில் நேரில் கலந்து கொண்டு ஸ்ரீராமபிரானுடைய அருளைப் பெறுமாறு பிரார்த்திக்கிறோம். தொடர்புக்கு – **9444144671 (WhatsApp Only)** இந்த உத்ஸவத்திற்கு நன்கொடைகளை கீழ்க்கண்ட வங்கிக் கணக்கிலோ மேலே கொடுக்கப்பட்டுள்ள QR கோடிலோ செலுத்தலாம்.

**Sri Sasraswathi Bhandaram Committee**
**Indian Bank Triplicane Brach S.B. A/c No.848266445 IFS Code: IDIB000T055**

Posted at Pathrika Channel Egmore RMS. Date of Publication: Second week of every month
GEETACHARYAN, Registered with Registrar of News Paper for India. R.N.I. No. 33614/1978
Postal Registration Number: TN/CH (C)/576/2024-2026
Licensed to post without prepayment WPP No. TN/PMG(CCR)/WPP-651/2024-2026
Posted between 16-18 JULY 2025.




Edited & Published by Dr.M.A. Venkatakrishnan and Printed by G.Rajan at RNR Printers & Publishers
8, Thandavarayan Street, Triplicane, Chennai 600 005. Published at 7, South Mada Street, Triplicane, Chennai 600 005.